பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 01 வெள்ளிக்கிழமை (14.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 109

# மோசடித் தேர்தலை நடத்தி விட்டு ஜனநாயகத்துக்கு வெற்றி என்பதா?

## சர்வதேசத்தை ஏமாற்றும் செயல் என்று கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு, மார்ச்.14

மோசடியான முறையில் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்திவிட்டு அதனை ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி என்றும் அரசின் கொள்கைகளுக்கு மக்கள் ஆதரவு வழங்கிவிட்டனர் என்றும் அரசு அறிவித்திருப்பது நாட்டு மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் திட்டமிட்ட செயலாகும்.

- இவ்வாறு சாடியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜா எம்.பி.நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

கடந்த 10ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெற்றதென்றும், அது ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றியென்றும் அரசு பெருமைப்பட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது.

கிழக்கை விடுவித்துவிட்டோம் என்ற பிரசார வெற்றியில் திளைத்திருக்கும் அரசினதும், இராணுவ, ஆயுதக் குழுக்களினதும் கட்டுப்பாட்டில் மக்கள் கைதிகளாக விடப்பட்டிருக்கின்றமையை யாவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராக வி.பி. பாலசிங்கம் நியமனம்



திருகோணமலை, மார்ச் 14

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக வி.பி. பாலசிங்கம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாளை சனிக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து நேற்று நியமனக் கடிதம் கிடைத்ததையடுத்து அவர் நாளை பதவியேற்கவிருக்கிறார்.

யாழ். மாநகர சபை ஆணையாளராகப் பல வருடங்கள் பதவி வகித்த அவர், பின்னர் மாகாண சபையில் பல்வேறு அமைச்சுக்களில் செயலாளராகப் பணியாற்றினார்.

# கிழக்கைத் தனிநாடாக பிள்ளையான் குழு பிரகடனப்படுத்தும் நிலை விரைவில் வரும்

## அரசை எச்சரிக்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, மார்ச் 14

''கிழக்கில் பிள்ளையான் குழுவுக்கு அரசால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கும் உத்தியோகபூர்வ அதிகாரம், கிழக்கை அக்குழு தனிநாடாகப் பிரகடனப்படுத்தத் துணை செய்யப் போகின்றது.

''வரதராஜப்பெருமாள் அன்று செய்த தனிநாட்டுப் பிரகடனத்தையே பிள்ளையான் குழு இன்று செய்யப்போகிறது. நாடு பிரிவதை எதிர்க்கும் அரசு, பிள்ளையான் குழுவுக்கு நாட்டைப் பிரித்துக்கொடுக்கப் போகிறது.''

- இவ்வாறு ஐ.தே.கட்சி நேற்று எச்சரித்தது. எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே இதைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனிவாவில் புலிகளுடன் பேச்சு நடத்திய அரசு, இலங்கையில் உள்ள ஆயு

(12ஆம் பக்கம் பார்க்க)

# காவலில் உள்ள 5 ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர் என்று குற்றச்சாட்டு

## எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு விசனம் தெரிவிப்பு

பாரிஸ், மார்ச் 14

பயங்கரவாத தடுப்புப் பொலிஸாரால் கொழும்பில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்ட ஐந்து பத்திரிகையாளர்களும் தடுப்புக் காவலில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுக் கவலை வெளியிட்டுள்ள எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு, இவர்களைத் தடுத்து வைத்திருப்பதற்கான காரணத்தை அரசு உடனடியாக வெளியிட வேண்டுமென்றும் கோரியுள்ளது.

பாரிஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

# அடாத மழைக்கு மத்தியிலும் மன்னாரில் கடும் ஷெல் மழை!

மன்னார், மார்ச் 14

மன்னார், திருக்கேதீஸ்வரம் மற்றும் மாந்தையில் உள்ள அடம்பன் ஆகிய பகுதிகளில் நேற்று அதிகாலை 3.30 மணி முதல் 5.30 மணிவரை கடும் மழைக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நேரடியாகக் கடும் துப்பாக்கிச் சமரும் பல்குழல் ஏவுகணை மற்றும் பீரங்கி, ஷெல் வீச்சுப் பரிமாறல்களும் இடம்பெற்றன என்று மன்னார் தகவல்கள் தெரிவித்திருக்கின்றன.

இந்த மோதலினால் சில ஷெல்கள் மன்னார், தள்ளாடிப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன என்றும், இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தெரியவரவில்லை என்றும் அந்தத் தகவல்கள் மேலும் குறிப்பிட்டன.

(12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழத்தை அங்கீகரித்து தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்து

சென்னை, மார்ச்.14

விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் மீதான தடையை நீக்கவேண்டும், தமிழீழத்தை அங்கீகரித்து மாநில அரசு தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் முன்னிலையில் வலியுறுத்தப்பட்டது.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் தமிழகத்தில் தொடர் முழக்கப் போராட்டம் நடத்தவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் பாதுகாப்பு இயக்கம் சார்பாக நேற்று சென்னையில் பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அக்கட்சித் தலைவர் ஜி.கே.மணி, வன்னி

(12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணிகள் பஸ் கட்டணம் குறைப்பு

யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தில் இருந்து தெல்லிப்பளைக்குச் செல்லும் கப்பல் பயணிகளுக்கான பஸ் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையின் பிரதான பிரதேச முகாமையாளர் க.கணேசபிள்ளை இத்தகவலைத் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச சிவில், அரசியல் உரிமைப் பட்டயம்: ஐந்து நீதியரசர்கள் முன் திங்களன்று ஆராய்வு

கொழும்பு, மார்ச் 14

சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பட்டயம் இலங்கையின் அரசமைப்புக்கும் ஏற்புடையதா என்பது குறித்தும் -

இந்தச் சர்வதேசப் பட்டயத்தை இலங்கை ஏற்றுக் கொண்டால், இலங்கைச் சட்டங்களுக்கு முரண்படாத விதத்தில் அதை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது குறித்தும் -

உயர்நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்கள் கொண்ட ஆயம் திங்களன்று இது குறித்து ஆராயவிருக்கின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் மழை தொடர்கிறது

## கிழக்கில் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். மாவட்டத்தில் கடந்த நான்கு நாள்களாக விட்டுவிட்டுப் பெய்த மழை 74.5 மில்லி மீற்றர் பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்றுக்காலை 8.30 மணிவரையான 24 மணி நேரத்தில் மாத்திரம் 26.1 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. இன்றும் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் அவதான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

WUSC OOTRU

## தொழிற்பயிற்சி நெறிகள் - 2008

### போதனாசிரியர்/உதவி போதனாசிரியர்

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை(WUSC) அனுசரனையுடன் ஊற்று நிறுவனத்தால் 2008இல் பின் வரும் பயிற்சிநெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளுக்கான பிரதான போதனாசிரியர்கள்/உதவிப் போதனாசிரியர்கள் தேவைப்படுகின்றனர். குறித்த பயிற்சி நெறிகளைக் கற்பிக்கக்கூடிய தகைமையும், அனுபவமும், கற்பித்தல் திறமையும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகி ன்றன.

01. மோட்டார் சைக்கிள் திருத்தல்
02. ரிங்கரிங், பெயின்ரிங் Tinkering & Painting
03. வீட்டு மின் உபகரணங்கள் திருத்தல்

தகுதியானவர்கள் தமது விண்ணப்பங்களை 21.03. 2008 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

**பயிலுநர்கள்**

இந்தப் பயிற்சிநெறிகளுக்கு ஏற்கனவே விண்ணப்பிக்காதவர்கள் 21.03.2008 க்கு முன் அலுவலகத்தில் நேரடியாக வந்து விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெ ய்து சமர்ப்பிக்கவும்.

பணிப்பாளர், ஊற்று நிறுவனம்,
மாலைசந்தி, அல்வாய் கிழக்கு, அல்வாய்
TP:021-2264505 (72005)



## ஸ்கந்தா அன்னையின் விழா நாயகனைப் பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரி
அதிபர்
திருவாளர் க.சிவாஜி
அவர்கள்

கல்லூரியின் ஆளுமையுள்ள ஆங்கில ஆசிரியராக, உபஅதிபராக, அன்பும், பண்பும், மதிப்பும் உள்ள அதிபராக கடமையாற்றி இன்றுடன் ஓய்வு பெறுவதையிட்டு, சகல இன்பங்களையும் பெற்று நீடூழிவாழ வாழ்த்துகிறோம்.

என்றும் நன்றியுடன் ஸ்கந்தா பழைய மாணவரும்,
யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியரும்
திரு.ச.சுகிர்தன், திரு.போ. உல்லாசவன் (72016)



## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் - இலங்கை இராமநாதன் நுண்கலைக் கழகம்

நுண்கலைமாணி(சங்கீதம்/ நடனம்/ சித்திரமும் வடிவமைப்பும்)
கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2007/2008
அனுமதிப்பரீட்சை
(ஆற்றுகை/ நேர்முகப்பரீட்சைகள்)

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதிப்பரீட்சைகள் (ஆற்றுகை/ நேர்முகப்பரீட்சைகள்) யாழ்ப்பாண மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு யாழ்.பல்கலைக்கழகத்திலும், ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு வவுனியா வளாகத்திலும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன. அனுமதிப்பரீட் சைக்கு தகுதியானவர்களுக்கான அனுமதிஅட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 021-222 6714 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

| கற்கைநெறி | யாழ்.பல்கலைக்கழகத்தில் பரீட்சை நடைபெறும் திகதி | வவுனியா வளாகத்தில் பரீட்சை நடைபெறும் திகதி | நேரம் |
|---|---|---|---|
| இசை | 17.03.2008, 18.03.2008, 19.03.2008 | 24.03.2008 | மு.ப 9.00- பி.ப 3.00 |
| நடனம் | 17.03.2008, 18.03.2008 | 24.03.2008 | மு.ப 9.00- பி.ப 3.00 |
| சித்திரமும் வடிவமைப்பும் | 24.03.2008 | 24.03.2008 | மு.ப 9.00- பி.ப 3.00 |

13.03.2008 பதிவாளர்






196, நாவலர் வீதியில் வசிக்கும்
வாஸ்கரன் - தர்கினி
தம்பதியரின்
செல்வப்புதல்வன்
லிஷாந்தன்
தனது 3 ஆவது பிறந்தநாளை இன்று (14.03.2008) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். அவரை அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா, அப்பப்பா, அப்பம்மா, அக்கா, அண்ணா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: வாஸ்கரன் (தந்தை).
196, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(72012)


## சிவத்தமிழ்ச்செல்வி ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 14

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி யாழ்.போதனா வைத்திய சாலை ஏழாம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஆலய மண்டபத்தில் சறுக்கி விழுந்ததில் அவருக்கு கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் இப்போது தேறி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

## சிவாஜிக்கு மணிவிழா மாத இறுதியில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச் 14

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் க.சிவாஜியின் மணி விழா நிகழ்வை மாத இறுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கல்லூரியின் பழையமாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் இணைந்து இந்த அதிபரின் மணிவிழாக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

மணிவிழாவுக்கான திகதி இன்னும் ஒரு சில தினங்களில் முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-203)


### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வாடகைக்கு வீடு

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தினர் பயன்படுத்துவதற்கு வசதியாக சகல வசதிகளுடனும் கூடிய ஆகக் குறைந்தது 2500 சதுர அடி பரப்பளவுள்ள வீடு விவசாய பீடத்தை அண்மித்த பகுதியில் வாடகைக்கு தேவை.

வீட்டை வாடகைக்கு தர விரும்புவோர் உதவிப்பதிவாளர்/நிர்வாகம், யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பபட்ட விண்ணப்பப்படிவங்களை 29.03.2008ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் உதவிப்பதிவாளர்/நிர்வாகம், யாழ்.பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் "விவசாய பீடத்திற்கான வீடு" என குறிப்பிடப்பட வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

(C/551832) பதிவாளர்



### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் புத்தகம் கட்டல்/சீர்திருத்தல் விலைமனு முடிவுத் திகதி நீடிப்பு

23.02.2008 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் 14.03.2008 முடிவடையவுள்ள விண்ணப்ப முடிவுத் திகதி 28.03.2008 பி.ப. 2.30 வரை நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவங்களை உதவிப் பதிவாளர்/நூலக சேவைகள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெறமுடியும்.

பதிவாளர்
14.03.2008 (C/551831)


## மூன்று மாத நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்.மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ப.நோ.கூ.சங்கங்கள் இந்த விநியோகத்துக்கான வழங்கற் கட்டளைகளை நாளை முதல் செயலகத்தில் பெற்று உடன் உடனடியாக நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்குமாறு அரச அதிபர் கே.கணேஸ் கேட்டுள்ளார். (1)

## தனித்திருந்த பெண் சடலமாக மீட்பு

பண்டத்தரிப்பு, காளையடி தெற்கில் வீட்டில் தனித்திருந்த வயோதிபமாது ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பூலோகம் பூமணி (வயது74) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சடலத்தில் அடிகாயங்கள் காணப்ப ட்டுள்ளதாகவும் முகத்தில் மூக்குப் பகுதி சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டது.சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (203-78)


## கண்ணீர் அஞ்சலி



காரைநகர் அபிவிருத்திப் பணியில் அயராது உழைத்து 13.03. 2008 அன்று திடீரென இறைவனடி சேர்ந்த காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயலாளர்

**அமரர் ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர்**

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெறவும் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபரும், உத்தியோகத்தர்களும்.
உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர்.
(C/551839)


## மரண அறிவித்தல்கள்


### பொன்னுத்துரை பொன்னம்மா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை பொன்னம்மா (12.03.2008) புதன்கிழமை அன்று அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வி.பொன்னுத்துரையின் அன்பு மனைவியும். கமலாம்பாள், கோகிலா, ரமணிஅம்பாள் ஆகியோரின் அன்புத்தாயரும் பாலசுந்தரம், சிவநாதன், சந்திரகுமார் அகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(பாமினி என்ஜினியரிங் அன் கிறஷர்),
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

தகவல்:
க.இ.பாலசுந்தரம் (மருமகன்)
(72017)



### துரைரட்ணம் சோதிராஜா



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் கச்சேரி-நல்லூர் றோட்டை வதிவிடமாகவும் கொண்ட துரைரட்ணம் சோதிராஜா (பெயின்ரர்) 11.03. 2008 செவ்வாய்க்கிழமை அகாலமரணமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைரட்ணம்-அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், சாந்தகுமாரியின் அன்புக் கணவரும், சாந்தினி (கனடா), மோகனகாந், சந்தோசினி,காலஞ்சென்ற நிசாந்தன், சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வீரசிங்கம்-சொர்ணாம்பிகை தம்பதியினரின் மருமகனும், ஜெயக்குமார் (கனடா), விஜிதா, இராஜேஸ்வரன் (ஜேர்மனி), சிவானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், வசந்தகுமாரி, விஜயகுமாரி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற தர்மகுலசிங்கம், காலஞ்சென்ற ஆனந்தசிவம் ஆகியோரின் மைத்துனரும், இராஜேஸ்வரி, திருலோகநாயகி, கிளி, காலஞ்சென்ற சற்குணானந்தன், சிவானந்தன், தனலட்சுமி ஆகியோரின் சகோதரனும், சிறிபாமினி (ஜேர்மனி), மாலினி (ஜேர்மனி), சயந்தன் (ஜேர்மனி), சதீஸ்கண்ணா ஆகியோரின் சிறிய தகப்பனாரும், பிறின்ஸ், டுலக்ஷி , சரண்ஜா, வினித், விஜித், ஜனோசா, ஜனோசன், சஞ்சை, விதுஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

80, கச்சேரி-நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சாந்தகுமாரி (மனைவி)
(72019)



### திருக்கேதீஸ்வரம் செல்லாச்சிப்பிள்ளை (பூரணம்)

பிரதான வீதி, பொலிகண்டி மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது சக்கலவத்தை, கரணவாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருக்கேதீஸ்வரம் செல்லாச்சிப்பிள்ளை நேற்று (13.03.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருக்கேதீஸ்வரத்தின் அன்பு மனைவி யும், காலஞ்சென்ற இளையதம்பி-சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி சின்னையாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விஜயநாதன் இராசம்மா, மாணிக்கவாசகர் இராசேஸ்வரி, இளையதம்பி நடராசா, இராஜமனோகரன் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மங்களேஸ்வரி, உஷாலோசனி, சச்சிதானந்தம், பிரணவேசானந்தா, தயானந்தா ஆகியோரின் அன்பு த்தாயாரும், கனகசபாபதி, சேனாதிராசா, சகுந்தலா, கௌரி, விமலா ஆகியோரின் அன்புமாமியும், வாசுகி, தீபா, செவ்வந்தி, அனுசூயா, கிஷோர், புபுது, சிவசங்கரன், கேசவன், கிருஷ்ணா, மதுமிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சியாமா, கேசினி, சகானா, அக்ஷினி, ஐஸ்வரி, மக்சிம் ஆலோக், பூரணி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.03.2008) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சக்கலாவத்தை,
கரணவாய் வடக்கு.

(A)

தகவல்:
குடும்பத்தினர்

# ரிம் அம்புரோஸ் அதிரடியாட்டம் இங்கிலாந்து ஓட்டங்கள் குவிப்பு



பந்தை 'சுவீப்' செய்யும் அம்புரோஸ்.

வெலிங்டன், மார்ச் 14

விக்கெட் காப்பாளர் ரிம் அம்புரோஸ் அதிரடியாக ஆட, நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 291 ஓட்டங்களைக் குவித்துள்ளது. ஆட்டமிழக்காமலிருக்கும் அம்புரோஸ் 97 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்.

நியூஸிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி 189 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று வெலிங்டனில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

அதன்படி இங்கிலாந்தின் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய அலஸ்ரியர் குக், மைக்கல் வோகன் ஆகியோர் சிறப்பாக ஆடி சரியான ஆரம்பத்தைப் பெற்றுக்கொடுத்தனர். இருவரும் மிகவும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். 28 ஓவர்களில் தங்களிடையே 79 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் 32 ஓட்டங்களுடன் மைக்கல் வோகன், ஜேக்கப் ஓரத்தின் வேகத்தில் 'போல்ட்' ஆனார். தொடர்ந்து மிரட்டிய ஓரம், மற்றைய ஆரம்ப வீரரான அலஸ்ரியர் குக்கையும் வெளியேற்றி அசத்தினார். அடுத்துவந்த அன்ட்ரூ ஸ்ரோரஸ் இம்முறையும் ஏமாற்றமளித்தார். வெறும் 8 ஓட்டங்களுடன் அவர் பவிலியன் திரும்பினார்.

தொடர்ந்து வந்த இயன் பெல் மற்றும் கெவின் பீற்றர்ஸன் ஆகியோர் விரைவாக விக்கெட்டைப் பறிகொடுக்க இங்கிலாந்து அணி தடுமாறத் தொடங்கியது. 5ஆவது விக்கெட்டாக பீற்றர்ஸன் வீழ்த்தப்பட்ட போது இங்கிலாந்து அணி 136 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

இந்நிலையில் 6ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த அணித்தலைவர் போல் கொலிங்வூட் மற்றும் விக்கெட் காப்பாளர் ரிம் அம்புரோஸ் ஆகியோர் அணியைச் சரிவிலிருந்து மீட்பதற்கு கடுமையாகப் போராடினர். ஒரு முனையில் கொலிங்வூட் நிதானமாக ஆட, மறுமுனையில் அம்புரோஸ் அதிரடியாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தார்.

சிறப்பாக ஆடிய அம்புரோஸ் தனது 2ஆவது டெஸ்ட் போட்டியிலேயே முதலாவது அரைச்சதத்தை 68 பந்துகளில் நிறைவுசெய்தார்.

நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 291 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அம்புரோஸ் 97 ஓட்டங்களுடனும் (137 பந்துகள், 15 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்), போல் கொலிங்வூட் 48 ஓட்டங்களுடனும் (113 பந்துகள், 6 பவுண்டரிகள்) ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். இன்று இரண்டாம் நாள் ஆட்டம் தொடரும்.

## கபில்தேவ் கண்டனம்

புதுடில்லி, மார்ச்.14

ஐ.சி.எல். வீரர்களை விரோதிகளாக கருதுவதை இந்தியக் கிரிக்கெட் சபை கைவிட வேண்டும் என்று கபில் தேவ் கூறியுள்ளார்.

'ஜீ' குழுமம் சார்பில் இந்தியன் கிரிக்கெட் லீக்(ஐ.சி.எல்.) எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பு சார்பில் விளையாடும் வீரர்களை இந்திய அணியில் தேர்வு செய்வதில்லை என்று இந்தியக் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. மேலும் இந்த போட்டிகளை கிரிக்கெட் சபை அங்கீகரிக்கவில்லை.

ஐ.சி.எல். தலைவராக இருக்கும் முன்னாள் இந்திய அணித்தலைவர் கபில்தேவ் கிரிக்கெட் சபையின் இந்த அணுகுமுறையினை கண்டித்துள்ளார். ஐ.சி.எல்லில் விளையாடும் வீரர்களை விரோதிகளாக நினைத்து தண்டிக்கும் போக்கை கிரிக்கெட் சபை கைவிட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

## இந்திய அணியிலிருந்து சஹீர்கான் விலகல்

புதுடில்லி,மார்ச் .14

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெறவுள்ள முதல் டெஸ்ட் போட்டியில் தன்னால் விளையாட முடியாது என்று இந்திய வேகப் பந்துவீச்சாளர் சஹீர்கான் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னியில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியின் போது சஹீர்கான் காயமடைந்தார். இதனையடுத்து அவர் நாடு திரும்பினார்.

வலது காலில் ஏற்பட்ட காயத்திற்காக அவர் தென்னாபிரிக்கா சென்று சிகிச்சை பெற்று ஓய்வெடுத்து வருகிறார். இந்நிலையில் இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான முதல் கிரிக்கெட் டெஸ்ட் எதிர்வரும் 26 ஆம் திகதி சென்னையில் தொடங்குகிறது.

இந்த டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு முன்தான் முழு உடல்தகுதி பெற வாய்ப்பில்லை என்பதால் இதில் விளையாட மாட்டேன் என்று சஹீர்கான் கூறியுள்ளார். எனினும், 2ஆவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்பேன் என்று கூறியுள்ளார்.

விளையாட்டு அரங்குகளில்

## ஓய்வுபெறப் போகின்றாரென அன்ட்ரூ நெல் எச்சரிக்கை

ஜொகான்னஸ்பேர்க், மார்ச் 14

இந்தியாவுடனான டெஸ்ட் தொடரிற்கான தென்னாபிரிக்க அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள வேகப் பந்துவீச்சாளர் அன்ட்ரூ நெல், கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப்போகின்றார் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் மிகச் சிறந்த வேகப் பந்துவீச்சாளர்களில் ஒருவராக அன்ட்ரூ நெல் திகழ்கிறார். எனினும், நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்ட இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் தேர்வு செய்யப்படவில்லை.

தென்னாபிரிக்கா அணியில் கறுப்பினத்தைச் சேர்ந்த வீரர்கள் குறைந்தது 6 பேராவது இடம் பெற்றிருக்க வேண்டும் எனும் நிர்ப்பந்தத்தை அடுத்து அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டு லாங்வெல்ற் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த முடிவால் கொதித்துப் போயுள்ள அன்ட்ரூ நெல் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறப்போகின்றார் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## தற்கொலைக் குண்டுக்கு ஆப்கானிஸ்தானில் 6 பேர் பலி

காபூல், மார்ச் 14

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் நேற்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

வாகனத் தொடரணியை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்கப் படைகளின் கவச வாகனத்திற்கு அருகில் வந்த கார் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.நான்கு அமெரிக்கப் படையினர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சம்பவத்தைத் தொடர்ந்து குறிப்பிட்ட வீதி முற்றாக மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

# இன்று ஈரானில் பொதுத் தேர்தல்



தெஹ்ரான், மார்ச் 14

ஈரானில் இன்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள அதேவேளை அமெரிக்காவை கடுமையாக எதிர்ப்பவர்களை மக்கள் தெரிவு செய்யவேண்டுமென ஈரானின் ஆன்மீக தலைவர் ஆயத்தொல்லா அலி கமேனி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈரானில் நாடாளுமன்ற தேர்தல்கள் நேர்மையான விதத்தில் நடைபெறாது என முன் வைக்கப்படும் விமர்சனங்களின் பின்னணியில், அமெரிக்காவும் மேற்குலகும் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் மனதில் தேர்தல் சுதந்திரமாக நடைபெறுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன என தெரிவித்துள்ள ஆன்மீக தலைவர், நீதியான தேர்தல் நடைபெறுமென மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

ஈரானின் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் சீர்திருத்தவாதிகளை நிராகரிக்குமாறு ஆயத்தெல்லா அலி கமேனி இதன் மூலம் மறைமுகமாக வேண்டுகோள் விடுத்துள்ளாரெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் சீர்திருத்தவாதிகள் மேற்குலகுடன் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்றும் உள்நாட்டில் அதிகளவு சுதந்திரம் நிலவவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். இஸ்லாமிற்கு போதியளவு விசுவாசமில்லாதவர்கள் எனத் தெரிவித்து இவர்களில் பலரிற்கு தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கடும் போக்காளர்களே தேர்தலில் வெற்றி பெறுவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

ஈரானின் உயர்மட்ட சபையொன்றே தேர்தலில் போட்டியிடுபவர்களிற்கான அனுமதியை வழங்குவது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, அமெரிக்கத் தேர்தலை ஈரான் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் ஆன்மீகத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஈரானின் நலனிற்கு எதிராக செயற்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். யார் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படக்கூடாது என ஈரானின் எதிரிகள் விரும்கிறார்களோ அவர்களை தெரிவு செய்யுங்கள் எனவும் அவர் கோரியுள்ளார்.

## விபசாரக் குற்றச்சாட்டில் சிக்கிய நியூயோர்க் ஆளுநர் ராஜினாமா



நியூயோர்க்,மார்ச் 14

விபசாரத்திற்கு துணை போனார் என எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து அமெரிக்காவின்நியூயோர்க்மாகாண ஆளுநர் எலியாட் ஸ்பிட்சர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

நியூயோர்க் மாகாணத்தில் கடந்த 100 ஆண்டுகளில் ஆளுநர் ஒருவர் பதவி விலக நேர்ந்திருப்பது இதுவே முதன்முறையாகும். நேற்று தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ள ஸ்பிட்சர், தனக்கு அடுத்தபடியாக துணை ஆளுநர் டேவிட் பேட்டர்சன் புதிய ஆளுநராக பதவியேற்பார் என்றும் கூறியிருக்கின்றார்.

செய்தியாளர்களிடம் பேசிய ஸ்பிட்சர் தம்மிடம் இருந்து எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு தான் நடந்துகொள்ள இயலாமல் போனமைக்காக வருந்துகின்றார் எனக் கூறினார். அப்போது அவரது மனைவி உடனிருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக வரக்கூடிய தகுதி பெற்றவராக கருதப்பட்ட ஸ்பிட்சர், 'மிஸ்டர் கிளீன்' என்று வர்ணிக்கப்பட்டவர். ஊழலை ஒழிக்க கடும் நடவடிக்கைகளை மேற்கொண்ட அவர் தன் மீதான புகாரைத் தொடர்ந்து அரசியலிலிருந்து விலகுகின்றார் எனத் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் ஹோட்டல் ஒன்றில் தன் பெயரில் அறை ஒன்றை எடுத்து அங்கு விலைமாது ஒருவரை ஸ்பிட்சர் அழைத்துச் சென்றமை ஹோட்டல் வீடியோவில் பதிவானதைத் தொடர்ந்தே அவர் பதவி விலகநேர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்தாரி பிரதமாராக வருவதற்கு மக்கள் கட்சியினர் முழு ஆதரவு

இஸ்லாமாபாத், மார்ச் 14

பெனாஸிர் பூட்டோவின் கணவர் சர்தாரி, பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்பதற்கு அவருடைய கட்சி எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் மக்கள் கட்சி எம்.பிக்களின் கூட்டம் 2ஆவது முறையாக இஸ்லாமாபாத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. கட்சியின் இணைத் தலைவரும் பெனாஸிரின் கணவருமான ஆசிப் அலி சர்தாரி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட எம்.பிக்களில் பெரும்பாலானவர்கள் சர்தாரிதான் பிரதமர் பிரதமர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று வற்புறுத்தினர். அவர் இடைத் தேர்தலில் போட்டியிட்டு எம்.பியாகும்வரை இடைக்காலப் பிரதமர் ஒருவரை நியமிக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இடைக்காலப் பிரதமர் பதவிக்கு பாமிடா மிர்சா, சர்தாரியே சகோதரி அஸ்ரா பெச்சுகோ, சையத் குர்ஷித் அகமது ஷா ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. அவர்களில் யாரை இடைக்காலப் பிரதமராக நியமிப்பது என்பதை முடிவு செய்யும் அதிகாரம் சர்தாரிக்கு வழங்கப்பட்டது.

கட்சித் துணைத் தலைவர் மக்தூம் அமீன் பாஹிமை நாடாளுமன்ற கட்சித் தலைவராகவும், அவருடைய மகனை அமைச்சர் அந்தஸ்தில் பிரதமரின் ஆலோசகராகவும் நியமிக்க முடிவு செய்யப்பட்டது.

பெனாஸிருக்கு நெருக்கமான பாஹிம் பிரதமராவதை மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் கூட்டணிக் கட்சியினரும் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

'சர்தாரியை பிரதமராக தேரந்தெடுப்பதால் கட்சி பிளவுபடாமல் இருக்கும்' என்று கட்சியன் பொதுச் செயலாளர் ஜஹாங்கீர் பதர் தெரிவித்தார்.

# மணிவிழாச் சிறப்பிதழ்

## எனது நோக்கில் அதிபர் சிவாஜி அவர்களின் கண்ணியமான பணிகள்



''தன்னைப்போல் பிறரையும் நேசி'' என்பது உயர்ந்தோர் வாக்கு. இந்த வகையில் கல்வியையும், கடமையையும், பதவியையும் ஒரே பாங்கில் வைத்துப் பணிபுரிந்தவர் சமீபத்தில் இளைப்பாறப்போகும் அதிபர் சிவாஜி அவர்கள். பழம் பெருமை வாய்ந்ததும் வழிவழியாகப் பதவி வகித்த அதிபர்களால் உயர்வடைந்ததும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியாகும். இக் கல்லூரியில் பதவி வகித்த அதிபர்கள் வரிசையில் ஒருவராக எம்போன்றோரால் போற்றப்படத்தக்கவர் அதிபர் சிவாஜி அவர்கள். கண்ணியம் மிக்க கல்விக் குடும்பத்தில் பிறந்து பெற்றோருக்கும், உற்றாருக்கும், ஊரவர்க்கும் கல்வி மான் என்ற பெருமையைத் தேடிக்கொடுத்தவர் இவர். சிறப்பாகக் கூறப்போனால் இவருடைய ஆங்கிலப் புலமைக்கும், ஆங்கிலப் பேச்சு வன்மைக்கும் நிகரே இல்லை என்று கூறிவிடலாம். கல்லூரிப் பணியை கடவுள் வழிபாட்டோடு இணைத்து வளர்த்தவர் இவர்.

ஸ்கந்தாவில் அமைக்கப்பட்டு இருக்கும் திருக்கோயில் அதிபர் அவர்களின் அதீத கடவுள் பற்றுக்கு ஓர் உதாரணமாகக் காட்சி தருகிறது. மேலும் தனது கல்லூரி ஆசிரியர்களையோ, பிள்ளைகளையோ, பெற்றோர்களையோ, நலன் விரும்பிகளையோ இனிய பேச்சாலும் எடுத்துக் கூறும் அறிவுரைகளாலும் தன்வசமாக்கிக் கொண்டவர் இவர். இப் பெரியாருடைய மாண்புகளை எடுத்துக் கூறுவதற்கு எனது வார்த்தைகளே போதாது என்றாலும் உள்ளத்தாலும் உதட்டாலும் சில வார்த்தைகளைச் சமர்ப்பிக்கிறேன். கல்வி உலகில் இவர் கலங்கரை விளக்கமாக என்றும் நிலைத்து நின்று பணிபுரிய வேண்டும் என்று எல்லாம் வல்ல துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து அமைகின்றேன். கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (ச.நீ),
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## எங்கள் ஸ்கந்தாவின் இனிய தலைமகன்



எங்கள் ஸ்கந்தாவின் இனிய தலைமகன். அன்பால், பண்பால் ஆளுமையால் அளப்பெரும் பணிகளாற்றிய பெருமகன். ஈரநெஞ்சுடையவர். உள்ளும் புறமும் தூய்மையுடையவர். சேக்கிழர் படைத்த பெரிய புராணம் முதல் சேக்ஸ்பியர் படைத்த ஒத்தலோவரை நன்கு அறிந்தவர். ஆங்கில இலக்கியத்தில் ஆழம் நிறைந்தவர். ஸ்கந்தவரோதயக் கல்லூரியை புனர் நிர்மாணம் செய்த புகழ்பூத்த அதிபர். எவருக்கும் எள்ளளவேனும் தீமை எண்ணாத தெய்வப்பிறவி. என் வாழ்வின் இனிய வழிகாட்டி. பல்லாயிரம் மாணவர்களின் கலங்கரை விளக்கு. அர்ப்பணிப்போடு பணி செய்து மணிவிழச் சிறப்புக் காணும் இப்பெருந்தகையை வாழ்த்து கிறேன். வணங்குகிறேன். மண்ணில் நல்ல வண்ணம் மேலும் மாண்புற இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கிறேன். ''யாவர்க்குமாம் இன்னுரைதானே''

ஆறு.திருமுருகன் பிரதி அதிபர்.

## YOU THE GREATEST



Oh! You the Greatest,
As the best teacher of English
Still how a fresh memory I have
Sure I am I brought you, the Greatest,
And broke the barriers
In the teaching of English in Skanda.
Witnessed I You grow and blossom!
Witnessed I Skanda grow and blossom!
With the growth and glory
You went to the upmost
With smiles and joy got the post,
As the Principal of Skanda.
Air of Skanda freshened always
By your tongue of English.
Soil of Skanda nourished always
By your nutritious thoughts of bliss.
All the Skandavarodayans march forward!
"The First Orator" is the first
At the marching!
All the Skandavarodayans march forward
You the second Orator
At the marching!
All we know the truth
Men may come and go
But men of words and deeds
Forever live with usl
Among our ever flowering Skandavarodayans
With everlasting thousands of thousands memories
Ohl You the Greatest,Sivaji
I pray and continue to pray
The goddess,Serani Amman
For your future prospects of life

*Vice Principal S.Mahendran*

## மணிவிழாக்காணும் அதிபர்



யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 23 ஆண்டுகள் தன்னலமற்ற ஆசிரியர், அதிபர் சேவைகளைப் பூர்த்திசெய்து மணிவிழாக்காணும் அதிபர் க.சிவாஜி அவர்களையும் குடும்பத்தினரையும் சீரும் சிறப்பும் பெற்று நீண்டகாலம் வாழ ஸ்கந்தப் பெருமானை வேண்டுகிறேன்.

- செல்வி தே.சங்கரப்பிள்ளை.

## சீரிய முதல்வர்



கந்தைய வள்ளலின் சிந்தைக்கு உகந்த
காத்திரமான கருணா மூர்த்தியாம்
சிந்தையால் 'ஸ்கந்த' உலகினை வளர்த்த
சீரிய முதல்வர் சிவாஜியே போற்றி.
கே.எஸ்.சிவஞானராஜா, பகுதித் தலைவர்.

## நிறைந்த மானிடம்



புன்னகை பூத்த முகம். கனிவான பேச்சு. மாணவர்களின் அபிமானத்துக்குரிய நல்லாசான். எங்கள் கல்லூரியின் வரலாற்று நாயகன் உயர்திரு. க.சிவாஜி (அதிபர்) அவர்களை வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன். தூய உள்ளம் படைத்த இனிய அதிபருடன் பணிசெய்யும் வாய்ப்புப் பெற்றவன் யான். பல வருடங்கள் இருவரும் ஆசிரிய நண்பர்களாக வாழ்ந்த வாழ்வு மறக்க முடியாதது. போர் அனர்த்தங்களால் எமது கல்லூரி பல்வேறு இழப்புக்களைச் சந்தித்து மீண்டவேளை அதிபர் பதவியை ஏற்ற பெருந்தகை இவர். இவரது உறுதியான உழைப்பும் விசுவாசமும் கல்லூரி நிமிர்ந்து நிற்கத் துணைசெய்தது. எத்தனையோ சவால்களைச் சந்தித்த போதிலும் சலிப்படையாது நேர்கொண்டு எம் கல்லூரி மாண்பைப் பேணிய மகத்தான அதிபர் இவர் என்றால் மிகையில்லை. உள்ளம் நிறைந்த உத்தம மானிடத்தின் மணிவிழாச் சிறக்க வாழ்த்தி அமைகிறேன்.

இ.ஜோர்ஜ்,
இளைப்பாறிய பிரதி அதிபர்.



உயர்திரு.
# கந்தசாமி சிவாஜி அவர்கள்
அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
[B.A.(Hons), Dip.in Edu., Special Trd. (ENGLISH)]

பிறந்த இடம்: உடுவில்- 16.03.1948
தந்தை : திரு.அ.கந்தசாமி (இளைப்பாறிய அதிபர், முன்னாள் பிறப்பு, இறப்பு பதிவாளர் வலி.தெற்கு)
தாய் : திருமதி தங்கரத்தினம் கந்தசாமி
மனைவி : திருமதி.கருணாதேவி (ஆங்கில விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
பிள்ளைகள் : சி.மாதுமை, சி.சாம்பவி, சி.ஆரமுதன்.
ஆரம்பக் கல்வி : சங்குவேலி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.
இடைநிலைக்கல்வி : வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக்கல்லூரி.
உயர் கல்வி : யாழ். பல்கலைக்கழகம்.

**பணிகள்**

1. ஆசிரியப் பணி
1977-1979- இரத்தினபுரி தமிழ் வித்தியாலயம்.
1979-1982- பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை.
1982-1986- கிளிநொச்சி மகாவித்தியாலயம், 1986-1991- ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
1991-1993-யாழ்.பல்கலைக்கழகம், 1993 - 2008- ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
2. யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் -
ஆசிரியர் சேவை- 10 வருடங்கள், பிரதி அதிபர் - ஒரு வருடம் அதிபராக - 12 வருடங்கள்
3. யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனம் - வருகை விரிவுரையாளர்(ஆங்கிலம்)
4. யாழ்ப்பாணக் கல்லூரி- பட்டப்படிப்புகள் பிரிவு- வருகை விரிவுரையாளர் (ஆங்கிலம்)
5. சிவபூமி அறக்கட்டளை - உபதலைவர்
6. மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்- புரவலர்

***

**கல்லூரியில் இவர் கால அபிவிருத்தி**

- பல்கலைக்கழகம் செல்லும் மாணவர் தொகை அதிகரித்தமை.
- பொறுப்பேற்கும்போதும் 610 மாணவர்கள் தற்போது 1,331.
- ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாயருக்குச் சிலை நிறுவியமை.
- கல்லூரி முதலாவது முகாமையாளர் Dr. P.S. சுப்பிரமணியம் அவர்களுக்குச் சிலை நிறுவியமை.
- கல்லூரி வளாகத்தில் ஸ்கந்தன் கோவில் உருவாக்கியமை.
- 200 அடிநீளமான கல்லூரி சுற்று மதிலை உருவாக்கியமை.
- புதிய மாடிக்கட்டடம், கணனிக் கூடம் என்பவற்றை உருவாக்கியமை.
- ஆரம்பப் பிரிவு உருவாக்கியமை.
- அகில இலங்கை ரீதியில் உதைபந்தாட்டத் துறை பங்குபற்ற விருத்தி செய்தமை.
- வீரர்களின் போர் என்ற ஸ்கந்தா எதிர் மகாஜனா துடுப்பாட்ட நிகழ்வை ஆரம்பித்தமை.
- கல்லூரியின் 110 ஆவது ஆண்டு விழா நடத்திச் சிறப்புமலர் வெளியிட்டமை.
- கல்லூரி மேலத் தேய வாத்தியக் குழுவை ஆரம்பித்தமை.

## மனிதரில் மாணிக்கமாகத் திகழ்ந்தவர்



மணிவிழாக் காணும் மகானாகத் துலங்குகின்ற எனது மதிப்பிற்குரிய திருமிகு க.சிவாஜி அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது முதல்வரின் காலத்திலே புகழ் பூத்த ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலே ஆறு வருடங்கள் சேவையாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நாம் சேவை செய்யும் இடம் நந்தவனமாக இருக்கும்போதுதான் அங்கு மன மகிழ்ச்சியுடன் எமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற முடியும். அந்த வகையிலே ''ஸ்கந்தா எனும் நந்தவனத்தை'' செம்மைப்படுத்தி, அங்கு சேவை செய்யும் ஆசிரியர்களின் நிலை அறிந்து, கடும் சொற் பேசாது, மிகவும் அமைதியான முறையிலே ''பசு மரத்து ஆணிபோல்'' நல்வழியூட்டும் திறன் எங்கள் முதல்வரிடம் மேலோங்கி நின்றது. தனக்குக் கிடைத்த பதவி உயர்வுகளை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு ஸ்கந்தாவின் அன்னையின் மாணவச் செல்வங்களை மேலோங்கச் செய்வற்காக அரும்பாடுபட்டார்.

தனது சொந்த நலன் கருதாது, கடமையைச் சீராகவும், சிறப்பாகவும் செயலாற்றும், முகாமைத்துவப் பண்பாளனாகத் திகழ்ந்தார். அவரின் சேவையின் மகத்துவத்தால் 610 மாணவர்களுடன் பொறுப்பேற்ற இக் கல்லூரி இன்று 1,331 மாணவர்கள் கற்கும் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது. பல்கலைக்கழகத்திற்கும் கல்வியியற் கல்லூரிக்கும், ஆசிரிய கலாசாலைகளுக்கும், விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்திற்கும், கலை, கலாசார நிகழ்வுகளிலும், மாணவச் செல்வங்கள் சிறப்படைவதற்கு வழி வகுத்த பெருமகன்தான் எங்கள் அதிபர். என்றும் என் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய எனது அதிபர் வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றேன். - திரு. மு.நடராஜா

உதவிக் கல்விப் பணிப்பாளர் [உடற்கல்வி], செயலாளர், பாடசாலை அ.வி.சங்கம், யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## இன்னல்கள் மத்தியிலும் கல்லூரியைப் பாதுகாத்தவர்



ஸ்கந்தாவின் வரலாற்றில் முன்னாள் அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களுக்கு அடுத்தபடியாக ஆகக் கூடிய வருடங்கள் அதிபராகக் கடமையாற்றி கல்லூரியை ஆழமாக நேசித்து அளப்பரிய சேவையாற்றி மனநிறைவுடன் ஓய்வுபெறும் அதிபர் திரு. கந்தசாமி சிவாஜி அவர்களுக்கு மணிவிழா மலர் வெளிவருவதையிட்டு பழைய மாணவர்களாகிய நாம் பேருவகை அடைகின்றோம். 1995ஆம் ஆண்டு கல்லூரி இடம்பெயர்ந்து தென்மராட்சியில் அதிபரின்றி தவித்த நேரத்தில் கல்லூரி நிர்வாகத்தை துணிவுடன் பொறுப்பேற்று பல இன்னல்கள் மத்தியிலும் தரம் குறையாமல் பாதுகாத்தவர் அதிபர் சிவாஜி அவர்கள்.

இக்கல்லூரி இந்துக்கல்லூரியாகவிருந் தும் ஒரு வேற்று மதத்தவரை பிரதி அதிபராக நியமித்தும் ஒரு பெண் ஆசிரியரை உப அதிபராக நியமித்தும் தனது முற்போக்கான செயற்பாடுகளை செயலில் காட்டிய உத்தமர். இவரின் பெரு முயற்சியால் அரசசார்பற்ற (NECORD) நிறுவனம் மூலம் அமைக்கப்பெற்ற இரு மாடிக் கட்டடம் கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றது. அதிபர் சிவாஜி யின் சேவைகளைக் கௌரவித்து இம்மண்டபத்திற்கு அதிபர் சிவாஜி மண்டபம் எனப் பெயர் சூட்டுவது காலப்பொருத்தமாகும். இவரின் சகல சிறந்த செயற்பாடுகளுக்கும் மூலகாரணமாகவும் வலது கரமாகவும் விளங்கியவர் பிரதி அதிபர் திரு. ஆறு.திருமுருகன் என்பது யாவரும் அறிந்ததே.

ஆ.சி.கணேசவேல் [ச.நீ.]
செயலாளர், பழைய மாணவர் சங்கம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்

## வாழ்த்துச் செய்தி




ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் வரிசையில் சீரிய பணியாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெறும் திருமிகு க.சிவாஜி அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். கடந்த இருபத்து மூன்று வருட காலமாக ஸ்கந்தாவில் சிறந்த ஆங்கில ஆசிரியராகவும் புகழ்பூத்த அதிபராகவும் பணியாற்றிக் கல்லூரிச் சமூகத்தின் அன்புக் கட்டளையை ஏற்று 1996 இல் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவரது காலத்தில் கல்லூரியில் அனுமதி பெறும் மாணவர்தொகை இரட்டிப்பாக அதிகரித்துள்ளதுடன் பல்கலைக்கழக அனுமதியிலும் அதிகரிப்புக் காணப்பட்டுள்ளது. கல்லூரி ஸ்தாபகருக்கும், முகாமையாளருக்கும் சீரிய முறையில் சிலை அமைத்து அவர்களுக்கு வணக்கம் செய்யும் மரபினை ஏற்படுத்தியுள்ளார். ஸ்கந்தப் பெருமானுக்குத் தனியான ஆலயம் அமைத்து மாணவர்களின் ஆன்மீக ஈடுபாட்டில் கவனம் செலுத்தியுள்ளார். புதிய மாடிக்கட்டடம், விடுதிப் புனரமைப்பு, சுற்று மதில், கணனிக்கூடம் போன்ற பல பௌதிகவள விருத்தி இவரது காலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆரம்ப பிரிவினை ஆரம்பித்ததன் மூலம் ஏழைப்பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வி வாய்ப்பளிக்கும் ஸ்தாபகரின் நினைவைப் பூர்த்தி செய்துள்ளார். 'வீரர்களின் போர்' என்ற வருடாந்த துடுப்பாட்ட நிகழ்வு மகாஜனக் கல்லூரியுடன் இவரது காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுப் பலரது பாராட்டுதலையும் பெற்றுள்ளது. பன்முக ஆளுமை படைத்த இவர் பல்வேறு சமய சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். அன்பும், பணிவும், அடக்கமும் இவரது அணி கலன்கள். ஓய்வுகாலத்தில் தேகாரோக்கியத்துடன் நீடுழிகாலம் குடும்பத்தினருடன் சந்தோஷமாக வாழ ஸ்கந்தப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

ப.விக்னேஸ்வரன்,
வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், மருதனார்மடம், சுன்னாகம்.

## மணிவிழா வாழ்த்துச் செய்தி



சமூகக்கட்டுமானத்தைப் பேணிப்பாதுகாத்து, கால ஓட்ட வளர்ச்சிகளை உள்வாங்கி, மனித வாழ்வின் மறுமலர்ச்சிக்கு வித்திடுகின்ற உயர் தகைமைச் சால்புடையவர்களை உருவாக்கி வருகின்ற உயரிய பணியினை ஆற்றுவதில் நீண்ட கால வரலாற்றினைக் கொண்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கடந்த 12 வருடங்களாக தலைமைத்துவச் சேவையினையாற்றி இளைப்பாறுகின்ற பெருந்தகை திரு.க.சிவாஜி அவர்களை வாழ்த்துவதில் அகமகிழ்வடைகின்றேன்.

இக்கல்லூரியில் ஆசிரியராக பணி புரிந்த வேளையில் பெற்றுக்கொண்ட களநிலை அனுபவங்களை அத்திவாரமாகக் கொண்டு தனது இயல்பான அடக்கம், நேர்முகமான சிந்தனை, உயரிய சீலம், நேர்கொண்ட பார்வை, ஆழமான உற்றுநோக்கல், அன்பான உரையாடல்கள் ஆகிய குணநலப் பண்புகளுடன் சிறப்பானதும், புத்திசாதுரியமான தீர்மானங்களை மேற்கொண்டு கல்விப் பணி மேம்பாட்டிலும் இணைப்பாடவிதான அபிவிருத்தியிலும் பௌதிக வள அபிவிருத்தியிலும் கனதியான பங்களிப்பினை நல்கியுள்ளார்.

கல்வி அடைவுப் பெறுபேற்றினை மேன்மேலும் உச்சப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் ஆரம்பக் கல்விப் பிரிவு உருவாக்கப்பட்டமை, போரினால் சிதைவுற்ற கட்டடங்களை புனரமைத்தமை, புதிய கட்டடங்களை நிர்மாணித்தமை, கல்லூரி நிறுவுநர்களைக் கௌரவப்படுத்தும் பாரம்பரிய நடைமுறைகளைக் கைக்கொண்டமை, மற்றும் சகோதரப் பாடசாலைகளுடன் இணைத்து இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் ஈடுபாட்டினை உருவாக்கிவித்தமை போன்றன குறிப்பிட்டு கூறப்படக்கூடிய விசேட சேவைகளாகும். அகவை அறுபதில் இளைப்பாறினாலும் இவருடைய உயர் ஆங்கில அறிவுப் புலமை பல்வேறு அமைப்புகளின் ஊடாக மாணாக்கர்களுக்கு தொடர்ந்து கிடைக்கும் என்பதில் ஐயம் எதுவுமில்லை. நீண்ட காலம் சுகதேகியாக வாழ்ந்து கல்வி உலகிற்கு சேவையாற்ற எனது நல்லாசிகளை நல்குகின்றேன்.

திரு.சு.சுந்தரசிவம்,
பிரதிக்கல்விப்பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்), வலிகாமம்.

## சிறந்த சேவையாளர்



உடுவிற்கோட்டத்திலே சிறப்பாக இயங்கிவருகின்ற பாடசாலைகளில் ஒன்றாக யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளங்குகிறது. கடந்த 12 வருடங்களாக இப் பாடசாலைக்கு அதிபராகச் சிறந்த பணியாற்றிவருபவர் திருவாளர் க.சிவாஜி அவர்கள். தனது அன்புகலந்த நிர்வாகத்திறமையினால் அனைவரையும் வெற்றிகரமாக இயக்கி வருபவர். தன்னலம் கருதாது பாடசாலை முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு நிலைகளிற் பணியாற்றிய அவரது சேவையை நான் அறிவேன். தனது பாடசாலையில் நடைபெற்ற கோட்ட மட்ட நிகழ்வுகளின்போது அவர் தந்த ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது. சிறந்த ஆங்கில ஆசிரியராகவும் விளங்கும் அவரது பணி மேலும் தொடர வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

திரு.செ.குபேரநாதன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர் உடுவிற்கோட்டம்.

## ஸ்கந்தா தலைநிமிரத் தன்னை அர்ப்பணித்தவர்



வளம் மிக்க கந்தரோடைக் கிராமத்திற்குப் பெருமை சேர்த்த புகழ்மிக்க கல்லூரி ஸ்கந்தவரோதயக் கல்லூரி. தேசிய கல்லூரிகளுக்குச் சமமான நிலையிலான யாழ்.மாவட்டத்தில் 1968, 70 களில் பெற்றிருந்தது. உன்னதமான வரலாற்றைக் கொண்ட இக் கல்லூரியைக் கட்டியெழுப்பிய அதிபர்கள் வரிசையில் 12 ஆண்டுகள் தனது சேவையை திரு.சிவாஜி அவர்கள் ஆற்றியிருக்கிறார். ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக நீண்ட பணி செய்த சிவாஜி அவர்கள் 1996 ஆம் ஆண்டு, இடப் பெயர்வின் போது ஏற்பட்ட நெருக்கடியான நிலையில் அதிபர் பதவியை ஏற்று ஸ்கந்தாவை மீண்டும் தலை நிமிரத் தன்னை அர்ப்பணித்தவர். சிவாஜி அவர்களின் காலத்தில் கல்லூரி மகத்தான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

உடுவிலில் நல்ல கல்விப் பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் தோன்றிய சிவாஜி அவர்களின் ஆளுமையும் பண்பும் தனித்துவமானவை. மனிதப் பண்புகள் நிறைந்த பழகுவதற்கு நல்ல சுபாவமுடைய நம்பிக்கைக்குரிய ஒரு தனிமனிதனாவார். நிதானமான வார்த்தைகளும், மற்றவர்களை அரவணைத்துச் செல்லும் பண்பும் அவரிடம் நான் கண்ட உயர்ந்த தன்மைகள். கல்லூரிச் சேவையை நிறைவு செய்த சிவாஜி வெளியில் உள்ள கல்விப் புலத்திற்கு எதிர்காலத்தில் சேவை செய்ய வேண்டுமெனவும் சகலமும் பெற்று வாழ வேண்டுமெனவும் கல்லூரியில் அருளாட்சி புரியும் நடராஜப் பெருமானை வேண்டுகின்றேன்.


ஆ.சிவஞானசுந்தரம் அதிபர், இராமநாதன் கல்லூரி.

## அன்பும் அரவணைப்பும் கலந்த அதிபர்



வரலாற்றுப் பெருமை கொண்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவராகத் திகழ்ந்து தனது பெயரையும் பதித்துக் கொண்டவர் எமது அதிபர் க.சிவாஜி அவர்கள். அன்பும் அரவணைப்பும் கொண்ட நெருங்கிய உறவுரிமை பூண்ட ஒரு வழிநடத்தலை அவர் ஆசிரியர்களிடம் மேற்கொண்டார். பாடசாலைக்காகத் தன்னையே அர்ப்பணித்த அவரது கடுமையான உழைப்பு ஆசிரியர்களையும் அவரைப் பின்பற்றத் தூண்டியது. மாணவர்கள் அனைவரதும் பெயர்களையும் அவர்களது குடும்ப விபரங்களையும் சொல்லக்கூடிய அவரது நினைவாற்றல் அவரது மேலதிக பலமாக அமைந்தது. அவரே அடிக்கடி கூறுவதுபோல மணல் திட்டுகளில் இருந்து மலைச் சிகரங்களை உருவாக்கிய அவரது பணியை ஸ்கந்தா அன்னை ஒருபோதும் மறக்க மாட்டாள்.

பா.மகாலிங்கசிவம், தலைவர், ஆசிரியர் கழகம்.





வடமராட்சி, வதிரி மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. இதில் சிறுவர்களுக்கான போத்தலில் நீர் நிரப்பும் போட்டி இடம்பெறுவதை முதலாவது படத்திலும் பெண்களுக்கான ஓட்டப் போட்டி இடம்பெறுவதை இரண்டாவது படத்திலும் உடற்பயிற்சிப் போட்டி இடம்பெறுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

# வலிகாமம் நண்பர்கள் துடுப்பாட்டம்; மூன்றாவது ஆண்டாக ஸ்கந்தா வசம் கேடயம்

## சஞ்சீவன் அரைச் சதம் போட்டார்

வலி.வடக்கு, மார்ச்14

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களுக்கும் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர்களுக்கும் இடையே இடம் பெற்ற நண்பர்களின் துடுப்பாட்டப் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய இப் போட்டி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நான்காவது தடவையாக இடம்பெற்ற இப்போட்டியுடன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி தொடர்ந்து மூன்றாவது வருடமாக வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் அணியினர் 145 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தனர்.

திலீபன் 25 ஓட்டங்களையும், ஜெயப்பிரியந்தன் 22 ஓட்டங்களையும் பெற்றார்கள்.

சதீஸ் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் இராஜ்குமார் 36 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் அணி 5 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

சஞ்சீவன் 58 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

ரவிசங்கர் 36 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். போட்டியில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் அணியைச் சேர்ந்த பி.ரவிசங்கர் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் அணியைச் சேர்ந்த சஞ்சீவன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், சகல கள ஆட்டக்காரராகவும் அணித் தலைவர் பா.ரஜீவன் சிறந்த களத் தடுப்பாளராகவும், சதீஸ்வரன் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (1-86)

# 19 வயதுப் பிரிவு கிரிக்கெட்; சென்.பற்றிக்ஸ் வெற்றிபெற்றது

வலி.வடக்கு, மார்ச்14

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளின் 19 வயதுப் பிரிவினருக்கு இடையே இடம் பெற்றுவரும் கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையேயான போட்டி சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 22.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

நிசாகரன் 19 ஓட்டங்களையும், லோறன்ஸ் 15 ஓட்டங்களையும், லதீஸ் 11 ஓட்டங்களையும் பெற்றனர். மைக்கல் 7 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 24 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் லவதீசன் 6 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் மற்றும் சதானந்தன், றெகினோ தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 34.3 ஓவர்களில் 96 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

நிலோசன் 31 ஓட்டங்களையும் மனோஜ் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பென்ஜோய் 4.3 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் விஜிதரன், நிரோஜன், விஷ்ணுபிரகாஸ் ஆகியோர் முறையே 15, 20, 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 67.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 170 ஓட்டங்களைப்பெற்றது.

லோறன்ஸ் 26 ஓட்டங்களையும், ஜெலன்ஸ், தஜீகன் ஆகியோர் தலா 22 ஓட்டங்களையும் பென்ஜோய் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

றெஜினோ 14.1 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் மைக்கல் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் லவதீசன், கமில்ரன், மிலாண்டோ ஜெனிபர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 59.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

நிலோசன் 31 ஓட்டங்களையும், ராகல்சன் 27 ஓட்டங்களையும், கமில்டன் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ரஜீவன் 21.3 ஓவர்களில் 6 ஓட்டமற்ற ஓவர்களுடன் 40 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் விஷ்ணுபிரகாஷ், லோறன்ஸ் தலா ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

ஆட்ட நிறைவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 2 ஓட்டங்களினாலும் 3 விக்கெட்டினாலும் வெற்றி பெற்றுள்ளது. (1-86)

# காமாட்சி ச.ச.நிலைய விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச்14

வண்ணை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இரு பிரிவுகளாக கரம், டாம், சதுரங்கம், பூப்பந்து ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குகொள்ள விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை நாளை சனிக்கிழமைக்கு முன் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

# அரச ஊழியர்களுக்கு பூப்பந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு, மார்ச்14

அரச ஊழியர்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியொன்று கொழும்பு கல்கிசையில் இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ளது.

இலங்கைப் பூப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் இப்போட்டி இடம்பெறவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அரச ஊழியர்களைக் கொழும்பில் உள்ள பூப்பந்தாட்ட சங்க தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# வலி.வடக்கு பிரதேச எல்லே போட்டி; மல்லாகம் எஸ்.எம்.எஸ்.சம்பியனானது

வலி.வடக்கு, மார்ச்14

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் இடம் பெற்ற எல்லே போட்டியில் மல்லாகம் எஸ்.எம்.எஸ். விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கமும் மல்லாகம் எஸ்.எம்.எஸ்.விளையாட்டுக் கழகமும் மோதின.

முதலில் விளையாடிய எஸ்.எம்.எஸ். விளையாட்டுக் கழகம் இரண்டு புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

மூன்று புள்ளிகள் பெற்றால் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம் வெற்றியென்ற நிலையில் புள்ளிகள் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

ஒரு புள்ளிபெற்ற நிலையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக்கழகம் மைதானத்தில் இருந்து இடையில் வெளியேறியுள்ளது.

இதனைத் தொடர்ந்து எஸ்.எம்.எஸ். விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (1-86)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச்14

யாழ்ப்பாணம் புனித றோக்ஸ் றோ.க. வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தி.சத்தியபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் திருமதிஅ.வேதநாயகம் கலந்துகொள்வார். (1)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. மைதானத்தில் நடைபெறும்.

வலயக் கல்விப் ணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்துகொள்வார். (1-207)

# சென்.ஜோன்ஸ் - யூனியன் ஆட்டம் சமநிலையில் முடிந்தது

## இராகுலன் 73 ஓட்டங்களை விளாசினார்

யாழ்ப்பாணம், மார்ச்14

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம் பெற்றுவரும் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 70.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

க.இராகுலன் 73 ஓட்டங்களையும், கே.பிரசாந்தன் 20 ஓட்டங்களையும், எஸ்.தனுசன் 19 ஓட்டங்களையும் பெற்றார்கள்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய தவநீதன், அச்சுதன் ஆகியோர் முறையே 12,15 ஓட்டங்களுக்குத் தலா 2 விக்கெட்டுகளையும் கரிவதனன், லருசன், எவோன்சன், விதுசன், கஜதீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 42.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

விதுசன் 15 ஓட்டங்களையும், லருசன் 15 ஓட்டங்களையும், தவநீதன் 11 ஓட்டங்களைப் பெற்றார்கள்.

ராகுலன் 13 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 32 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் தனுசன், தினேஸ்காந் முறையே 14, 16 ஓட்டங்களுக்கு தலா 2 விக்கெட்டுக்களையும் மற்றும் ரிசாந் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 38.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

கே.பிரசாந்தன் 22 ஓட்டங்களையும், தர்சன், தினேஸ் தலா 14 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

அச்சுதன் 14.1 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும், தவநீதன் 15 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 32 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 39 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 107 ஓட்டம் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

விதுசன் 67 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். யூனியன் கல்லூரி சார்பில் இராகுலன் 2 மற்றும் தினேஸ்காந், தர்சன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மனம் மகிழ
17 . 05 . 1939



மனம் நெகிழ
13 . 02 . 2008

## அமரர் மாதன் தம்பித்துரை

குடும்பம் ஒரு கோயில்
பிள்ளைகள் அதில் தீபம்
என்பதையே வாழ்வியலாக்கி
மெழுகாக உருகினீர்!

பண்புக்கு இலக்கணமாய்
பாசத்தின் பொக்கிசமாய்
குடும்பத்துக்கோர் உற்ற துணையாய்
பிள்ளைகளுக்கோர் நல் வழிகாட்டியாய்
உறவுகளுக்கோர் உத்தமராய்
அவனி போற்ற வாழ்ந்த
எமது அன்புத் தெய்வமே!

எம் மூச்சுக் காற்று உள்ளவரை
உம் நினைவு எம்மோடு கலந்திருக்கும்.

கடந்த 13.02.2008 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.03.2008) வெள்ளிக்கிழமை முற்பகல்11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

விளையாட்டரங்க வீதி,
கட்டப்பிராய்,
கோப்பாய் தெற்கு.

(71995)

**குடும்பத்தினர்.**

---

# அக மகிழ்ந்து வாழ்த்தி வணங்குகின்றோம்



எமது வித்தியாலயத்தில் கணிதபாட சிரேஷ்ட ஆசிரியையாக இருந்து தம் சிறப்பான கடமையினால் பாடசாலைச் சமூகத்தை ஈர்த்துக் கொண்டவரும், இன்று யாழ்.கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளராக இடமாற்றம் பெற்று வந்து தம் சேவையைத் தொடருபவருமாகிய

**திருவாட்டி அருளேஸ்வரி வேதநாயகம்**

அம்மணி அவர்கள் கல்விப்புலம் சார்ந்த சிறப்புக் கல்வியில் மேலோங்கி மேலும் சிறப்புற்று வாழ வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
யா/நடராஜ இராமலிங்க வித்தியாலயம், ஆவரங்கால்.

(சி/551826)

---

முன்னாள் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் அனுசரணையுடன் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் வெளியீட்டில்

## "வாழும் போதே..." கல்வி விழிப்புணர்வு குறும்பட வெளியீட்டு விழா

பிரதம விருந்தினர்: **பேராசிரியர் ச.சத்தியசீலன்**
(தலைவர், வரலாற்றுத்துறை- யாழ்.பல்கலைக்கழகம்)

இடம்: யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபம்
காலம்: இன்று (14.03.2008) வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணி



தலைவர்:
**S.K. யோகநாதன்** (பீடாதிபதி)
(யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)



தயாரிப்பு:
**திருமதி அ.வேதநாயகம்**
(வலயக் கல்விப் பணிப்பாளர்)



எண்ணம்- எழுத்துரு- நெறியாழ்கை
**திரு. க.இ.கமலநாதன்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், நாடகத்துறை- யாழ்.தே.க.க.)



கமரா, ஒளிப்பதிவு, எடிடிங், பாடல்கள்
**மாணியூர்K.ரட்ணேஸ்வரன்**
(சித்திரத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.தே.க.க.)



பிரதம நடிமுகம்
**திரு.பா.தனபாலன்**
(உப பீடாதிபதி, (கல்வி) யாழ்.தே.க.க.)



இசை ஒலிப்பதிவு
**திரு.கேதீஸ்**
(அருணா இசைக்குழு)

நடிகர்கள்: தனம், வேதநாயகம், கிருசாலினி, கமல், சுத்தானந்தன், பத்மராச், கலைச்செல்வன், யோகலிங்கம், ஆன், விஜய், வசந்தன், மற்றும் பலர்...

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**நுண்கலை மன்றத்தினர்.**

(71998)

---

# கண்ணீர் அஞ்சலி



கூட்டுறவில் சேர்ந்தாய்
கூட்டுறவை நேசித்தாய்
கூட்டுறவைப் போற்றினாய்
கூட்டுறவையே பேசினாய்
கூட்டுறவால் பலம் என்றாய்
கூட்டுறவில் பயனும் பெற்றாய்
கூட்டுறவுக்காய் உழைத்தாய்
கூட்டுறவினால் உயர்ந்தாய்
இன்று ஏன் ஐயா!
இந்தக் கூட்டுறவு (களை) மறந்தாய்!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் பொதுமுகாமையாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

## அமரர் கிட்டினன் சிவனேசன்

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.மாவட்டக் கூட்டுறவாளர்கள்.**

(சி/551824)

# குடாநாட்டில் பருவம் மாறிப் பெய்துவரும் பெரும் மழையால் சிறு தானியச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

குடாநாட்டில் கடந்த ஒரு சில திண்களாகப் பருவம் மாறிப் பெய்துவரும் பெரும் மழையால் சிறு தானியப் பயிர்ச்செய்கை அழிவடையும் நிலையில் உள்ளதாக செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய சகல பிரதேசங்களிலும் பெரும் மழையால் பயிர்ச்செய்கைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாமத்தில் மழையினால் அண்மையில் விவசாயிகளால் நடுகை செய்யப்பட்ட மிளகாய்க் கன்றுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மிளகாய் கன்றுகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு குருமன் நோய் ஏற்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை தைப்போக வெங்காய செய்கையின் அறுவடை சில பகுதிகளில் நடைபெற்று வருவதால் அதுவும் மழையில் நனைந்து பாதிக்கப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் நெல் அறுவடை செய்யப்பட்ட வயல்களில் பயிரிடப்பட்ட சிறு தானியப் பயிர்கள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மாத முற்பகுதி மழை பெய்ததை அடுத்து கால போக நெற்செய்கை அறுவடை செய்யப்பட்ட வயல்களில் பயறு, உளுந்து, கௌபீ போன்ற சிறு தானியப் பயிர்களும், கத்தரி, பாகல், வெண்டி, பூசணி, புடோல் ஆகிய விவசாயப் பயிர்களும் பயிரிட்டன. தற்போது அவை மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

வடமராட்சியிலும் தீவகத்திலும் பெருமளவில் செய்கை பண்ணப்பட்டிருந்த புகையிலைச் செடிகளும் ஏனைய சிறுதானியப் பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேவேளை-

அறுவடை செய்யப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்த புகையிலைகளும் மழையில் நனைந்துள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

## முன்பள்ளி இணைப்பாளர்களுக்கு இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறுமென வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு. பாக்கியராசா அறிவித்துள்ளார். (1-207)

## கெருடாவிலில் திருட்டு முயற்சி; சந்தேகத்தில் மூவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 14

சாவகச்சேரி, கெருடாவில் பகுதியில் முகமூடி அணிந்து சென்று வீட்டுக்காரரை தாக்கி திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர்களில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன்றினுக்குள் முகமூடியணிந்த நிலையில் சென்றவர்கள் வீடு சோதனையிடப் போவதாக கூறி வீட்டிலிருந்தவர்களை வெளியே வருமாறு அழைத்து தாக்கியுள்ளனர்.

இவர்களின் நடத்தையில் சந்தேகம் கொண்ட வீட்டுக்காரர் கூக்குரலிடவே அயலவர்கள் ஓடிவர திருடர்கள் தப்பி ஓடி விட்டனர்.

திருட வந்தவர்களில் ஒருவரை வீட்டுப் பெண்மணி இனங்கண்டதால் சாவகச்சேரி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இதனை அடுத்து இச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரைக் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்ட கல்வயலைச் சேர்ந்த தபேந்திரராசா கிரிசாந்தன், பெருங்குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுதர்சன், கெருடாவிலைச்சேர்ந்த நகேந்திரன் தயாபரன் ஆகியோரை பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இரத்தினசிங்கம் பிரியதர்சன் என்பரைத் தாக்கியதாக மூவர்மீதும், வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து பயமுறுத்தியதாக இருவர் மீதும் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்குகளை விசாரித்த நீதிவான் சந்தேகநபர்கள் மூவரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (1-207)

## கரவெட்டிப் பிரதேசத்தில் உள்ள சங்கங்களை காலந் தாழ்த்தாது பதிவு செய்ய அறிவுறுத்து

கரவெட்டி, மார்ச் 14

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சகல சங்கங்களும் புனரமைப்புச் செய்யப்படுகின்றன. எனவே பதிவு செய்யாத சங்கங்களை உடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பரராஜசேகரம் கேட்டுள்ளார்.

இப் பிரதேச செயலர் பிரிவில் 35 சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 15 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 20 சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்படவேண்டியுள்ளன.

எனவே புனரமைப்புச் செய்ய வேண்டிய சங்கங்கள் காலந்தாழ்த்தாது உடன் பதிவு செய்யுமாறு அபிவிருத்தி உதியோகத்தர் மேலும் தெரிவித்தார். (202-70)




## தென்மராட்சிப் பாடசாலை தரம் 5 மாணவர்களுக்கு மதிப்பீட்டு செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 மாணவர்களுக்கானன மதிப்பீட்டுச் செயலமர்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

மதிப்பீட்டுக்கான வினாத்தாள்களை இன்று வெள்ளிக்கிழமை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறும்-

மதிப்பீட்டின் பகுப்பாய்வை எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்வி அபிவிருத்தி பிரிவு அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் வல யக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித் துள்ளார். (202-207)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி.தென் மேற்கு மற்றும் வலி. மேற்கு பிரதேச செயலகங்கள் இணைந்து தையல், மனையியல் கண்காட்சியை அண்மையில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடத்தின.

இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கண்காட்சியை திறந்து வைப்பதையும் அருகில் வலி. தென் மேற்கு பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாக மூர்த்தி ஆகியோர் நிற்பதை முதலாவது படத்தில் காணலாம்.

*(படங்கள்:- வலிதென்மேற்கு செய்தியாளர்)*

## காரைநகர் பிரதேசத்தில் நிறுவைகள் அளவைகள் கருவிகள் முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம், மார்ச் 14

காரைநகர் பிரதேச சபைக்கு உட்பட் நிறுவனங்களின் நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு இன்று வெள்ளிக்கிழமையும், எதிர்வரும் திங்கட்கிழமையும் காலை 9 மணிமுதல் முத்திரையிடும் பணி காரைநகர் பிரதேச சபையின் தலைமையை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து வர்த்தக நிலைய உரிமையாளர்கள், சந்தை வியாபாரிகள் மற்றும் நிறுவைகள், அளத்தல் நடைவடிக்கையில் ஈடுபடும் அனைவரையும் தமது தராசு, படிகள், அளவை உபகரணங்களையும் கொண்டு வந்து முத்திரையிடுமாறு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார். (202-68)

## அலகுப் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9, தரம் 11 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு இன்று நடக்கவிருந்த அலகுப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-207)

# பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் சாதனைகள் புரிந்த யாழ்.பல்கலைக்கழகம்

### பெருமிதத்துடன் கூறுகிறார் துணைவேந்தர்



நல்லூர், மார்ச் 14

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் எமது பண்பாட்டின் செழுங்கலை நியமமாய் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ளது.. இதற்கு இங்கு பணியாற்றும் ஒவ்வொரு வரும் பெரும் பங்காற்றியுள்ளனர்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஓய்வுபெற்ற மற்றும் 25 வருட சேவையை நிறைவுசெய்த ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை நேற்று முன்தினம் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடதத்யது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:

தமக்குரிய கடமை இதுதான் என்ற வரையறையுடன் நிற்காது பல்வேறு செயற்பாடுகளிலும் ஈடுபாடு கொண்டு தமது திறைமைகளை மென் மேலும் வளர்த்துக்கொள்வதில் அனைத்து உத்தியோகத்தர்களும் ஆர்வம் கொள்ள வேண்டும். அதற்கு ஊழியர் சங்கமும் தன்னை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

சிங்களத்தில் 'சகோதரய' என்ற சொல்லுக்கு ஒரு தனி மரியாதை உண்டு. அது போலவே தோழர் என்று சொல்லுமாகும் இந்த வகையில் பூரணத்துவம் மிக்க பணியொன்றில் தம்மை அர்பணித்து நிறைவான சேவை செய்த அனைவரையும் தோழமையுடன் கௌரவிக்கும் சங்கத்தின் நோக்குப் பாராட்டுக்குரியது.

இன்றைய விழாவில் கௌரவிக்கப்படுகின்ற அனைத்துப் பெருமக்களும் தாம் வாழ்ந்த வாழ்வையும் அதன் அர்த்தத்தையும் எண்ணிப் பெருமைப்படும் அதே வேளை, பணியில் உள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் தமது கடைமைகளில் மேலும் திறமையும் ஆர்வமும் மிக்கவர்களாகவும் விளங்குவதற்கு வழிகாட்டும் உங்கள் அனைவ ருக்கும் எனது அன்பான மனம் நிறைந்த வாழ்த்துக்கள்- இவ்வாறு துணைவேந்தர் குறிப்பிட்டார்.

## வடமராட்சி கிழக்கில் ப.தெ.வ.அ.கூ.சங்க விற்பனை நிலையங்கள் அமைக்க வேண்டுகோள்

கட்டைவேலி, மார்ச் 14

வடமராட்சி கிழக்கு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களை ஆரம்பிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்ட பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கக்கிளை விற்பனை நிலையங்கள் எதுவும் இயங்குநிலையில் இல்லை. இதனால் நாளாந்தம் உற்பத்தி செய்யும் கள்ளை சந்தைப்படுத்த முடியாமல் வீடுகளிலும், வீதி முடக்குகளிலும் விற்று வருவதனால் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டு வருகின்றன.

எனவே இப் பகுதியில் பனை, தென்னைவள அபிவிருத்திச் சங்கக் கிளை விற்பனை நிலையங்களை இயக்குவதன் மூலம் சட்டவிரோதமாகக் கள் விற்பனை இடம்பெறுவதை கட்டுப்படுத்த முடியுமென அம்பன் கிராம அலுவலர் எஸ்.சிவலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு மேற்கொள்வதாக வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் தெரிவித்துள்ளார். (202-275)

## வீரகத்திப் பிள்ளை ம.வி.க்கு கணனிகள் அன்பளிப்பு

பருத்தித்துறை, மார்ச் 17

தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் 25 கணனிகளையும் அதற்கான தளபாட உபகாணங்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (202-218)

## பருத்தித்துறை நீதிமன்றத்தில் உள்ள வாகனங்களைப் பொறுப்பேற்கக் கோரிக்கை

பருத்தித்துறை, மார்ச் 14

பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்ட வாகனங்களை உரிமையாளர்கள் உரிய ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நெல்லியடிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள் போன்றவற்றையே பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

உரிமை கோரப்படாத வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-218)

## ஆனைக்கோட்டையில் நிவாரண அட்டை மீளாய்வு

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுபவர்களுக்கான வெள்ளை அட்டை மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

இம் மீளாய்வில் புதிய படிவமொன்று பூரணப்படுத்தப்பட்டு பிரதான குடியிருப்பாளரின் கையொப்பம் பெறப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (202-100)

## தரம் - 5 மாதிரிப் பரீட்சை திட்டமிட்டபடி இடம்பெறும்

கோப்பாய் கோட்டப் பாடசாலையகளின் தரம் 5 இற்கான மாதிரிப் பரீட்சை திட்டமிட்டபடி நாளை நடைபெறும் எனவும் அதன் குழுநிலை மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஏற்கனவே நடைபெற்ற இடங்களில் இடம்பெறும் எனவும் கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலர் அறிவித்துள்ளார். (50)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் பிரதி அதிபர்
செஞ்சொற் செல்வர்
**ஆறு.திருமுருகன்**
அவர்கள் யாழ்.பல்கலைக்கழகப் பேரவை
உறுப்பினராகப் பல்கலைக்கழக
மானியங்கள் ஆணைக்குழுவால்
தெரிவுசெய்யப்பட்டமைக்காக அவரை
வாழ்த்துகின்றோம்.

(71989) கந்தரோடை,
சுன்னாகம். யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரிச் சமூகம்.


# VACANCIES

JOIN THE LEADING TEAM

☞ யாழ்ப்பாணம் ☞ நெல்லியடி

**LECTURER-Full Time** Male

- Should posses working experience in the same field
- Subject areas are VB, Oracle, Java, Scripts, C , C++ , Accounting packages and Hardware & Networking.

மேல் குறிப்பிட்ட பிரதேசங்களில் பணிபுரிய விரும்புவோர் தங்களுடைய சுயவிபரக்கோவையில் பணிபுரிய விரும்பும் இடத்தை குறிப்பிட்டு 7 நாட்களுக்குள் கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும் அல்லது விண்ணப்பங்களை நேரில் கையளிக்கவும்.

CSC COMPUTER EDUCATION
No:-101, 2nd Floor, Stanley Road,
Jaffna.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 . 10 . 1935



உதிர்வு 25 . 03 . 2007

### திருமதி சட்டநாதர் சிதம்பரம் (காஞ்சனா)

*திதி: பூர்வபக்க அட்டமி (14.03.2008)*


மறவன் புலோவில் மலர்ந்து மலர்மணம் பரப்பி
தொல்லை இல்லா வாழ்வு அமைத்து
செல்லக் கணவன் சேர்பிள்ளைகள் எழுவரை பெற்று
அல்லல் இன்றி எழுபத்து மூன்று அகவை கண்டீர்
ஆண்டு ஒன்றல்ல ஆயிரம் சென்றாலும் உங்கள் அன்புமுகமும்
அரவணைப்பும் அழியாமல் எங்கள்
நினைவில் என்றென்றும் இருப்பாய் அம்மா.
*உங்கள் ஆத்மா சாந்தி அடைய தினமும்*
*மணற்காட்டுக் கந்தனை வேண்டி நிற்கின்றோம்.*

(71975)

*நி.முகவரி:* மறவன்புலோ, சாவகச்சேரி.
*த.முகவரி:* ஆறுமுகம் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

மண்ணில் 26 . 07 . 1931



விண்ணில் 13 . 02 . 2008

எமது குடும்பத் தலைவர் அரியாலையூர்
உயர்திரு. **செல்லையா அருளம்பலம்**
*(முன்னாள் கணக்காளர்)*

பாசமிகு எம் தந்தையே!
நேசமிகு எம் குடும்பத்தின் ஆணிவேரே
அழகான எம் குடும்பத்தின்
அர்த்தமான பரம்பொருளே
உங்கள் கடமை முடிந்ததென
எம்மை விட்டுச் சென்றீர்களோ?
நாம் என்றென்றும் உங்கள் நினைவினில்.

(71988)

*வவுனியாவில் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரது மரண வேளையிலும் இறுதிச் சடங்கிலும் கலந்து கொண்டவர்களுக்கும் நேரடியாகவும் உள்ளூரிலும் வெளியூரிலும் இருந்தும் தொலைபேசி, தந்தி மற்றும் மலர்வளையம் மூலம் இரங்கலைத் தெரிவித்தோருக்கும், சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசேவை புரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (14.03.2008) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

588/2, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்14

சாவகச்சேரி, கற்குழி கந்தசாமி ஆலய பொதுக்கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (202-207)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்14

தென்மராட்சி பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் சங்கத் தலைவர் செ.சரவணமுத்து தலைமையில் நடைபெறும்.

பிரதேசத்தில் உள்ள ஓய்வூதியர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சங்க செயலாளர் மு.காசித்தம்பி அறிவித்துள்ளார். (203-207)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச்14

மூளாய் முத்துக்குமாரசாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் (202-28)

* * *

வடமராட்சி, மார்ச்14

பருத்தித்துறை, தும்பளை இலட்சுமணன் தோட்டம் அருள்மிகு பிள்ளையார் கோயில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேகத்திற்கான கரும ஆரம்பம் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் இடம்பெறும்.

26ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிமுதல்பிற்பகல்3மணிவரைஎண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும். (202-236)

## வெலிகாமப் பகுதியில் கைக்குண்டு மீட்பு

வெலிகம்,மார்ச்14

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றுடன் கிராமவாசி ஒருவர் கடந்த திங்களன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஸ்ஸ-வெஹெரகல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றை வெலிகம பொலிஸார் சோதனை செய்த போது இக் குண்டு கண்டெடுக்கப்பட்டது.

இந்தக் குண்டு வீட்டினுள்ள மரக்கொட்டிலின் உள்ளே மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

மாத்தறையிலிருந்து இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

இது சம்பந்தமாக வெலிகமப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## பதுளை அட்டாம்பிட்டியில் இரண்டு துப்பாக்கிகள் மீட்பு

பதுளை,மார்ச்14

இரகசியதகவல் ஒன்றை அடுத்து வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகளை பதுளை அட்டாம்பிட்டிய பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை மீட்டுள்ளனர். அது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அட்டாம்பிட்டியவைச் சேர்ந்த அம்பிட்டித்தன்னை கிராமத்திலுள்ள வீடொன்றில் இருந்தே இந்தத் துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நபர்கள் விசாரணையின் பின் வெலிமடை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர் என அட்டம் பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திலின ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார். (சி)

## நான்கு பொலிஸாருக்கு பணித்தடை

கொழும்பு, மார்ச் 14

பம்பலப்பிட்டி பகுதியில் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாக நான்கு பொலிஸார் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவர் கான்ஸ்டபிள்கள் இருவரும் மற்றும் சிவில் பாதுகாப்பாளர் ஒருவருமே பணி நிறுத்தப்பட்டவர்களாவர்கள் என்று கூறப்பட்டது. (சி)

## சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
சாவகச்சேரி

### கோப் சிற்றி அமைப்பதற்கான கேள்வி கோரல்

எமது சங்கத்தின் கட்டடத் தொகுதியில் 'கோப் சிற்றி' ஒன்று அமைப்பதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்க மற்றும் புனரமைப்புத் தொடர்பில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்களைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேரில் பெற்று கேள்விகோர விரும்புவோர் தங்களின் விண்ணப்பத்தினை 19.03.2008 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு முன்னதாகச் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்,
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி.
*12.03.2008* (சி/551821)

## ஆத்மசாந்தி நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 24 ★ 10 ★ 1939



உதிர்வு 12 ★ 02 ★ 2008

### *அமரர்* சின்னத்தம்பு சோமசுந்தரம்
(Rtd M.L.T.)

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பு சோமசுந்தரம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று *(14.03.2008)* வெள்ளிக்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டி சனசமூக நிலையத்திலும் பன்னாலையில் உள்ள அன்னாரது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பன்னாலை, தெல்லிப்பழை. *(70628)* குடும்பத்தினர்.

## ஈரவிழிகளில் ஈராண்டு நினைவு நாள்

அன்னை மடியில் 09 . 11 . 1983



இறைவன் அடியில் 05 . 04 . 2006

### செல்வன் பழனி பகீரதன் (குட்டி)

*திதி: வளர்பிறை அட்டமி (14.03.2008)*

ஈரவிழிகளில் கண்ணீர் மல்க ஓடி மறைந்ததோ இருவருடங்கள்
சுழிபுரம் என்னும் பெரும் பகுதியில் வாழ்ந்த 'பகீரதா'
நீ எங்கு ஓடி மறைந்தாய்! பல்கலையும் நன்கு கற்று
பண்பு மிக்க பெருமகனாய் குட்டி என அழைக்கப்பட்டாய்
நீ மலேசியா சென்று திரும்புவாய் என உனது சகோதரர்கள்
எதிர்பார்க்க காலன் உமது உயிரைப் பறித்தானா?
*நீ என்றும் இறைவனடியில் அமைதி காண ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (71977)
உன்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 30 . 10 . 1923



மறைவு 13 . 02 . 2008

### அமரர் சின்னன் சின்னத்தம்பி

13.02.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டும் நேரிலும் துண்டுப்பிரசுரம், தொலைபேசி, பத்திரிகை ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு எமது நன்றியினைத் தெரிவிப்பதோடு, இன்று (14.03.2008) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மந்துவில் வடக்கு,
கொடிகாமம். (71874) குடும்பத்தினர்.

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனித உரிமை மீறல் விவகாரத்தில் சர்வதேசம் தொடுக்கும் ஏவுகணை

மோசமான மனித உரிமை மீறல்களுக்காக இலங்கையைப் பிய்த்து உதறியிருக்கின்றது அமெரிக்கா.

உலக நாடுகளில் மனித உரிமைகள் பேணப்படும் விவகாரம் தொடர்பாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் வருடாந்த அறிக்கையிலேயே இலங்கை காட்டமாக விமர்சிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் போக்குத் தொடர்பாக 'சர்வதேசப் பொலிஸ்காரனான ' அமெரிக்காவின் போக்கும் பார்வை யும் எப்படி அமைந்திருக்கின்றது என்பதைப் பிரதிபலிக்கும் ஆவணமே இப்போது வெளியாகியிருக்கின்றது.

இந்த அறிக்கையில் இலங்கை முற்றாகக் கண்டிக்கப்பட்டிருக்கின்றது; காட்டமாக விமர்சிக்கப்பட்டிருக்கின்றது; மனித உரிமை பேணும் போக்கும் ஆட்சிமுறையும் குற்றவா ளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்களின் சூத் திரதாரிகள் அரசுப் படையினரும் அவர்களோடு கூட்டாக இயங்கும் துணைப்படைக் குழுவினருமே என்பதைச் சுட்டிக்காட்டி இத்தவறுகளுக்கு இலங்கை அரசைப் பொறுப்பாக்கும் அமெரிக்க அரசின் இந்த அறிக்கை, இத்தகைய மோசமான மனித உரிமை மீறல்களினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் சிறுபான்மையினரான தமிழ் இனத்தைச் சேர்ந்த இளம் ஆண்களே என்பதையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

இதன்மூலம் ஒரு விவகாரத்தை இந்த அறிக்கையின் வரிகளுக்கு இடையில் - எழுத்தில் குறிப்பிடாத வாசகங்கள் ஊடாக - அமெரிக்கா சொல்ல முயல்வதையும் நாம் உய்த்துணர்ந்து கொள்ள முடியும்.

இலங்கையில் 'இன அழிப்பு யுத்தம்' ஒன்றை சிறுபான்மை இனத்துக்கு எதிராக ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார்கள் என்ற கருத்து நிலைப்பாட்டையே அமெரிக்கா தனது இந்த அறிக்கையின் வாசகங்களுக்கு இடையில் - அச்சில் வராத எழுத்துகள் வாயிலாக - பூடகமாக, நுட்பமாக முன் மொழிய எத்தனிக்கின்றது என்பதே அது.

ஏற்கனவே இலங்கையின் மனித உரிமை மீறல் போக்கைக் கவனத்தில் எடுத்துள்ள அமெரிக்கா, இலங்கைக்கு ஆயுதத் தளபாடங்களை வழங்குவதைத் தடைசெய்து முடிவெடுத்திருக்கின்றது. இலங்கை மனித உரிமைகளைச் சரிவரப் பேணுகின்றது என்பது உறுதிப்படுத்தப்படும் வரை இந்தத் தடை தொடரும் என்றும் அமெரிக்கா தீர்மானித்திருக்கின்றது. அதேசமயம் அமெரிக்காவின் மிலேனியம் உதவித் திட்டத்தின் கீழான உதவிகளையும் இதே காரணத்துக்காக இலங்கை இழந்து தவிப்பதும் கவனிக்கத் தக்கது.

'புலிப் பயங்கரவாதத்தை அழித்தல்' என்ற வெளிவேடப் பூச்சோடு இலங்கையின் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மைப் போக்கிலான ஆட்சிபீடம் புரியும் அரச பயங்கரவாதத்தைக் தெரிந்தும் தெரியாமலும் - பார்த்தும் பாராமலும் - விட்டுப்பிடிப்பதற்கு உலக நாடுகள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல என்பதையே அமெரிக்காவின் தற்போதைய அறிக்கை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் தான் சேர்த்து, தானே தடை விதித்த விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை விமர்சிப்பதையும் கண்டிப்பதையும் இந்தத் தடவை தனது அறிக்கையில் அமெரிக்கா சற்று அடக்கி - அமுக்கி - வாசித்திருப்பதையும் கூட அவதானிக்க முடிகின்றது.

பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் தான் சேர்த்துள்ள புலிகளின் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்காவின் அறிக்கை கூறும் மிதமான போக்கு வாசகங்களோடு இலங்கையின் ஆட்சிக் கட்டமைப்பின் செயற்பாடு தொடர்பாக அதே அறிக்கை கூறும் காட்டமான - சூடான - வாசகங்களை ஒப்பிடும்போது, பயங்கரவாத ஆட்சியமைப்புகளின் பட்டியலில்தான் இலங்கையை அமெரிக்கா சேர்க்கவேண்டிய நிலைமை உருவாகுகின்றது என்பது கூட எண்ணத் தோன்றுகின்றது.

இத்தகைய மோசமான ஆட்சி நிர்வாகம் ஒன்று இலங்கையில் ஏற்பட்டமைக்கு, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது விடுதலைப் புலிகளும் அவர்களது வழிகாட்டலில் வடக்கு - கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர்களும் நடந்து கொண்ட போக்கே முக்கிய காரணம் என்று பலரும் குற்றம் சுமத்துவதும் தெரிந்ததுதான்.

என்ன நோக்கத்திற்காக - இலக்கிற்காக - இத்தகைய ஆட்சிக்கு வழி செய்யப்பட்டதோ, அது கனகச்சிதமாக நிறைவேறி வருகின்றது என்பதை அமெரிக்காவின் தற்போதைய அறிக்கையும் தெளிவுபடுத்தி நிரூபிக்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்ய மறுத்து, அவர்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைப் படுத்துவதே தென்னிலங்கையின் மாற்ற முடியாத பரவணிப் போக்கு என்பதை இவ்வளவு விரைவாக சர்வதேசத்துக்கும் சந்தேகத்துக்கு அப்பால் நிரூபித்துக் காட்ட இந்த ஆட்சியைத் தவிர வேறு எதனால்தான் முடிந்திருக்கும்?

ஒருபுறம் தமிழர் தாயகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் தமிழ் மக்களுடனும் யுத்த களம் ஒன்றைப் பெரும் எடுப்பில் திறந்திருக்கும் இலங்கையின் ஆட்சி அதிகாரத்துக்கு, அதன் விளைவாக மறுபுறம் சர்வதேச அரங்கில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பரந்த கள அரங்கு ஒன்றையும் சந்திக்க வேண்டிய இக்கட்டு இப்போது உருவாகியிருக்கின்றது.

யுத்த களத்தில் புலிகளின் ஏவுகணைகளை எதிர்கொண்டு சமாளிக்க முற்படும் மஹிந்தவின் அரசினால் சர்வதேச மட்டத்தில் அமெரிக்க அரசு முதற்கொண்டு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் வரை பல தரப்பும் ஏவும் மனித உரிமை மீறல் தொடர்பான கணைகளைச் சமாளிக்கக் கூடியதாக இருக்குமா? காலம் பதில் கூறும்.

## இ.போ.ச.கோண்டாவில் சாலையில்

# ஒரு சில நாள்களுக்கான டீசல் மட்டுமே கையிருப்பில் போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிக்கும் நிலையில்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 53 மில்லியன் ரூபா வழங்க வேண்டுமாம்

யாழ்ப்பாணம்,மார்ச்14

இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் இன்னும் ஒரு சில நாள்களுக்குப் போதுமான டீசல் மட்டுமே கையிருப்பில் உள்ளது என்று இ.போ.ச.கோண்டாவில் சாலை பிரதான பிரதேச முகாமையாளர் க. கணேசபிள்ளை தெரிவித்தார்.

அந்தக் கையிருப்பு முடிவடையும் நிலையில் போக்குவரத்துச் சேவைகளை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று அவர் மேலும் அச்சம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:

பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு 53 மில்லியன் ரூபாவை நாம் கொடுப்பனவாக வழங்க வேண்டியுள்ளது.

இந்த நிதி வழங்கப்படாது உள்ளமையால் அவர்கள் எமக்கான டீசலைத் தருவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் யாழ்.அரச அதிபர் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி 6 ஆயிரத்தி 600 லீற்றர் டீசலைப் பெற்றுத் தந்தார்.

அது இன்னும் ஒருசில நாள்களுக்கே போதுமானதாக உள்ளது.

இது முடிவடையும் நிலையில் நாம் போக்குவரத்துச் சேவையை இடைநிறுத்த வேண்டிய நிலையே ஏற்படும்.

இதேவேளை- ஒரு நாளைக்கு மட்டும் பாடசாலைச் சேவையாக 40 பஸ்கள் சேவையில் ஈடுபட வேண்டியுள்ளது.

டீசல் தட்டுப்பாடு ஒருபுறம் இருக்க பஸ்களுக்குத் தேவையான ரயர், ரியூப் போன்றவற்றையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பொதுமக்களுக்காக ஓடப்படும் பஸ்களையே மாற்றி பாடசாலைச் சேவைக்கும் விடவேண்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தபோதும் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க முன்வரவில்லை.

இங்கு பணியாற்றுபவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுக்கென 3.6 மில்லியன் ரூபா தேவையாக உள்ளது. ஆனால் இதற்கென அரசு 1.9 மில்லியன் ரூபாவை மட்டுமே எமக்கு வழங்குகின்றது. மீதியை இலாபம் மூலம் வழங்குமாறு கூறுகின்றது.

இந்நிலையில் இலாபத்தின் மூலம் ஏனைய தேவைகளை நிறைவு செய்ய முடியாது உள்ளது. இதனால் போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிக்கும் நிலைமையே தோன்றியுள்ளது- என்றார்.

(203)

# கூட்டுறவுச் சங்கங்களுக்கான பற்று வரி நீக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு

நல்லூர்,மார்ச்14

கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பற்றுவரி நீக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் ஆ.சுப்பிரமணிய சர்மா அறிவித்துள்ளார்.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ 01.01.2008இல் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிட்ட அறிவித்தலின் பிரகாரம் இந்த வரி நீக்கப்பட்டுள்ளதாக சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த வரி நீக்கத்தின் மூலம் சங்கத்தினர், பாவனையாளர், வாடிக்கையாளர் மற்றும் அங்கத்தவர்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கும்.

* சங்கங்களில் வங்கிச் செலவு குறைவடையும்.
* இலாபம் அதிகரிக்கும்.
* தொழிற்பாடு மூலதனத்தில் சொந்த நிதியின் பங்கு அதிகரிக்கும்.
* கிராமிய வங்கிகளில் சேமிப்புகளை வைத்திருப்போருக்கு வட்டி வீதங்களை அதிகரித்து வழங்க முடியும்.
* அதிகரித்த வட்டி வீதங்கள் அறிவிக்கப்படும்போது வாடிக்கையாளர்களைக் கவருவதன் மூலம் சேமிப்புகளை ஊக்குவித்து அதன் மூலமாக இலாப வீதத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.
* தேவைக்கேற்ப வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடிய வாய்ப்பை இச் சலுகை மூலம் பெற்றுக்கொள்வதனால், சங்கங்களின் நிதி பாதுகாக்கப்படுகின்றது.
* சங்கத்தினால் உழைக்கப்பட்ட இலாபத்தின் இழப்பு இதன்மூலம் தவிர்க்கப்படுவதனால், சங்கத்தின் செயற்படு வினைத்திறன் ஆற்றல் அதிகரிக்க வாய்ப்பு உண்டு.

-ஆகிய நன்மைகளைப் பெறக்கூடியதாக இருக்கும்- என்றுள்ளது.

(202-111)

# மோட்டார் சைக்கிள் மோதி மாணவன் காயம்

யாழ்ப்பாணம், மார்ச்14

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் பாடசாலை மாணவனை மோதிக் காயப்படுத்தியது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை கல்வயலில் இடம்பெற்றது.

சாவகச்சேரி, கல்வயல் சித்தன்மாவடியைச் சேர்ந்த தில்லைநாதன் சாரங்கன் (வயது-15) என்ற மாணவனே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(202-207)

# இலங்கைக்கான உதவிகளைத் தொடர்வது பற்றி ஐரோப்பிய ஒன்றியக் குழு இப்போது ஆராய்கிறது

## ஒருமாத காலம் இலங்கையில் தங்கியிருக்கும்

கொழும்பு,மார்ச்14

இலங்கைக்கான உதவிகளைத் தொடர்ந்து வழங்குவதற்கு முன்னர் இங்குள்ள நிலைமைகளை அவதானிப்பதற்கென மூவர் அடங்கிய குழு ஒன்றை ஐரோப்பிய ஒன்றியம் அனுப்பியுள்ளது.

அலெக்சாண்டர் புளோகஸ் தலைமையிலான இந்த குழு கடந்த வாரம் இலங்கை வந்தடைந்துள்ளது. இக்குழு ஒரு மாதம் தங்கியிருந்து நிலமையை ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகள் மற்றும் ஏற்றுமதிச் சலுகைகள் போன்றவற்றிற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் பொருட்டு நாட்டின் நிலமைகளை ஆராய்ந்து வருகின்றோம் என்று அலெக்சாண்டர் புளோகஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் எவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவிகள் பயன்படுத் தப்பட்டன என்பது தொடர்பாகத் தொழில்துறைப் பிரதிநிதிகளிடம் கருத்துக்களைக் கேட்டறிவதே எனது நோக்கம். எமது குழுவினர் வர்த்தகத் திணைக்களம், ஏற்றுமதித் திணைக்களம், தொழிற்சாலை வர்த்தக அமைச்சக அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமை மீறல்களை தொடர்ந்து இலங்கைக்கான ஜிஎஸ்பி ஏற்றுமதி சலுகைகளை ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து வழங்காது விடலாம் என்ற கருத்துக்கள் வலுவாக தோன்றியிருந்தன.

எனினும் இந்தச் சலுகைகளை மேலும் 3 வருடங்களுக்கு புதுப்பிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் கடந்த மாதம் தீர்மானித்திருந்தது எனவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தச் சலுகைகளின் அடிப்படையில் கடந்த ஆண்டு ஏற்றுமதிகள் மூலம் ஐரோப்பியச் சந்தைகளில் இருந்து இலங்கை அரசு 2.9 பில்லியன் டொலர்களை சம்பாதித்திருந்தது.

இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமை மீறல்கள் குறித்து கடுமையான விமர்சனங்கள் ஐ.நாவின் மனித உரிமைச் சபை கூட்டத்திலும், ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டங்களிலும் ஏற்பட்டு வருவதுடன் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்டுவர ஐரோப்பிய ஒன்றியம் பல தடவைகள் முயற்சித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் இலங்கையின் அபிவி ருத்தி மற்றும் முதலீட்டுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகத்துறை ஆணையாளர் பீற்றர் மண்டேல்சனுடன் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதிச் சலுகைகள் நீடிப்பது குறித்து பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(203)

### நாளை

| | |
|---|---|
| பங்குனி -02 | 15.03.2008 சனிக்கிழமை |
| திதி: நவமி | பி.இ. 04.40வரை |
| நட்சத்திரம் : | திருவாதிரை பின்னிரவு 5.00 வரை |
| சுபநேரம் : | 03.20 - 04.50 |
| ராகுகாலம் : | 09.20 - 10.50 |

## தென்மராட்சி தெற்கில்

# வெடி பொருள்கள் அகற்றப்பட்ட வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 14

தென்மராட்சி தெற்கு பிரதேசத்தில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட நெல் வயல்களை அடுத்த காலபோக நெற் செய்கைக்கு அனுமதிக்குமாறு அப் பகுதி நெற்செய்கையாளர்கள் மகஜர் மூலம் பிரதேச செயலரைக் கேட்டுள் ளனர்.

வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டு யாழ்.அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட பெருமளவு நெல்வயல்கள் கடந்த வருடங்களில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை எனவும்-

இதனால் அப்பகுதியில் உள்ள நெற்செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

மறவன்புலோப் பகுதியில் பெருமளவு வயல்கள் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்ட போதிலும் குறிப்பிட்ட அளவு வயல்களிலேயே நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதையும் மகஜரில் சுட்டிகாட்டியுள்ளனர்.

(202-207)

# கண்ணீர் அஞ்சலி



எங்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளரும் காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயலாளரும் பிரபல சமூகத் தொண்டருமான

## ஜெ.தில்லையம்பலவாணர்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரத்தில் மூழ்கியுள்ளோம். அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி பெற தில்லைக்கூத்தனைப் பிரார்த்தித்து நிற்கிறோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/கலாநிதி.ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்
காரைநகர். (சி/551839)

# கண்ணீர் அஞ்சலி

எமது செயலக உத்தியோகத்தர்
திருமதி கடம்பானந்தன் குகனந்தி
அவர்களின் அன்புத் தந்தையார்

## கார்த்திகேசு ஏரம்பு

அவர்கள் 12.03.2008 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரதேச செயலரும்,
ஏனைய உத்தியோகத்தர்களும்.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக உத்தியோகத்தர்
நலன்புரி சங்கம், சங்கானை. (72015)

# கண்ணீர் அஞ்சலி



திருமதி

## பூபதி குமாரசாமி

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Dr.விஜயகுமார், ஆனந்தி,
ஹென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி. (71997)

# ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 20 ★ 12 ★ 1981



ஆண்டவன் அடியில் 26 ★ 03 ★ 2007

செல்வன்

## மாணிக்கம் விஜயகுமார் (குமார்)

கண்ணீரில் ஓராண்டு கரைந்து போனதைய்யா!
கண்முன்னே நீ இல்லை எம் மோடு உறவாட
எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உன்னுடைய நினைவுகளே
உற்றவர்கள் துயருற உன் உயிரை எமன் பறித்தானோ?
வற்றாத கங்கை போல் குமார் என்று வாய்விட்டுக் கதறியழ
ஆற்றுவார் யாருமின்றி தவிக்கின்றோம்
நாம் இங்கே சின்னண்ணா
நீ ஒர் ஆறுதல் வார்த்தை சொல்வாயோ குமார்!

தகவல்:
K.V.K. மில் வீதி,
உடுப்பிட்டி. (72008)
குடும்பத்தினர்
அண்ணன் - மா.ரூபன்

# 7ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 08★05★1938
விண்ணில் 14★03★2001

## திருமதி வல்லிபுரம் இராசமணி

பெற்றெடுத்த நாள்முதல்
- பிரியமுடன் எமை அணைத்து
உற்றதெல்லாம் எமக்களித்து
- உவகை கொண்ட அம்மாவே!
நீர் செய்த சேவைக்கு இவ்வுலகில் ஈடேது
உம்மை விட இவ்வுலகில் ஈடுசெய்ய உறவேது?

க.வல்லிபுரம் (கணவர்)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.
சாந்தை,
பண்டத்தரிப்பு. (72003)

## வடமராட்சி வலயத்தில் கரப்பந்தாட்டம்

கரவெட்டி, மார்ச் 14

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.15 மணி முதல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட பாடசாலை அணியினரை நேரத்துக்கு சமூகமளிக்கும் படி வலய உடற்கல்விப் பணிப்பாளர் வ.வல்லிபுரம் கேட்டுள்ளார். (1-70)

## கல்வியியல் மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

பட்டப்பின் கல்வியியல் தகமைக் கற்கை நெறி பகுதி நேரம் முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கல்வியற்துறை விரிவுரை மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

முதலாம் வருட மாணவர்களை உரிய நேரத்தில் கலந்து கொள்ளுமாறு கலைப்பீடாதிபதி அறிவித்துள்ளார். (-203)

# காணவில்லை

செங்கருப்பு பசு மாடு 1 1/2 வயது மதிக்கத்தக்கது. கழுத்தில் மஞ்சள் கயிறு கட்டப் பட்டுள்ளது. கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். 7/3, துரைராசா வீதி, வண்ணார்பண்ணை,யாழ்
தொடர்பு: 0776 254201

எனக்கு ஒளியாயிருந்து, உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையாக உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதிற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும், உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி

-ஓர் அடியாள்.

# BEAUTY CULTURE

இங்கு 3 மாதகால கேக் ஐசிங், உணவு தயாரித்தல், பூவேலை, FABRIC PAINTING, கைவேலை, கூந்தல் அலங்காரம், FACIAL பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

✱ 3 மாதகாலப் பயிற்சிகளின் பின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

முகவரி: இல.06, சட்டநாதர் வீதி, முடமாவடி, நல்லூர். தொலைபேசி இலக்கம்: 021 222 9586 (72002)

# கல்வி

PERSONAL/GROUP CLASSES

தரம் 6-8 வரை(தமிழ், சுகாதாரம், புவியியல், குடியுரிமை,வரலாறு) மற்றும் தரம் 6 - O/L வரை கணிதம், விஞ்ஞானம் என்பன வீடு வந்து கற்பிக்கப்படும். (நல்லூர், கொக்குவில், கோண்டாவில், இணுவில் மற்றும் உடுவில் பகுதிகளில் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்)

தொடர்பு:-
சி.ரமேஸ், மணியகாரன் லேன், கொக்குவில் கிழக்கு.
021- 4590594

# காணி விற்பனைக்கு

மல்லாகத்தில் கே.கே.எஸ்.வீதியில் இரண்டரைப்பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
சே.ஆனந்தசபாபதி, கட்டுடைவளர் வீதி, அளவெட்டி.
T.P-0777 242198
021-222 3147

# விற்பனைக்கு

மேசன் தொழிலாளர்களுக்குரிய தூண் அச்சுப் பெட்டி, கல்லரிவுப் பெட்டி, சட்றிங் வேலைகளுக்குரிய பலகைகளும், வார் முட்டு மரங்களும் ஏனைய பொருள்களும்

தொடர்பு:-
த.கனகரெத்தினம்,மேசன், புங்குடுதீவு வீதி, வேலணை.6

# தவறிவிட்டது

அராலி மேற்கு, வட்டுக் கோட்டையைச் சேர்ந்த தேவகடாட்சம் நகுலேஸ்வரனின் தேசிய அடையாள அட்டையும்(811941476V), கையடக்கத் தொலைபேசியும் 09.03.2008 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:-
சன்முகம் உணவகம், யாழ் சிவன் கோவிலடி.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

மலர்வு 14 ★ 08 ★ 1928



உதிர்வு 15 ★ 02 ★ 2008

## அமரர் தவமணி சின்னத்தம்பி

(உசன் தெற்கு) திதி: 14.03.2008 (வெள்ளிக்கிழமை)

அன்பின் இலக்கணமாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் நிறைகுடமாய் - எம் எல்லோரையும்
வாழவைத்த ஒளிவிளக்கே! எம்முயிர்
உள்ளவரை அழியாது உம் நினைவு

கடந்த 13.02.2008 அன்று காலமான எங்கள் அன்புத் தாயின் இறுதிக் கிரியைகளில் கலந்து துயரம்பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தோருக்கும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை. (சி/551823)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் விவேகானந்தர் (J.P)

(ஜோதிட சிந்தாமணி)



புங்குடுதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விவேகானந்தர் அவர்கள் 12.03.2008 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இராசம்மாவின் அன்பு மகனும் நிர்மலாதேவியின் அன்புக் கணவரும் சச்சிதானந்தன் (ஆஸ்திரேலியா),காலஞ்சென்ற தனலெட்சுமி மற்றும் சண்முகானந்தன் (கொழும்பு), நித்தியானந்தன் J.P(நியூ கல்யாணி ஜூவல்லறி, யாழ்ப்பாணம்), கமலானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நேற்று (13.03.2008) வியாழக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24 A, வளாக வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 4590256 (72013)
தகவல்:
வியன் சுப்.நித்தியானந்தன் (J.P)
(சகோதரன்)

## கருணாகரன் குமார்



கிளிநொச்சி, திருநகரை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கருணாகரன் குமார் நேற்று (13.03.2008) வியாழக்கிழமை கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கருணாகரன் தம்பதியரின் அன்பு மகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் அசோகன், அருந்ததி, ராசன், தனபதி (பவுண்), சந்திரசேகர், நகுலேஸ்வரன் (சந்துறு), அனித்தா (மஞ்சு) ஆகியோரின் அன்புத்தந்தையும் வசந்தி, சிறிகாந்தராசா, சுரேந்திரன் (சுரேஸ்), கொன்சலா, சசி, துசி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.03.2008) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் கிளிநொச்சியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அன்னசத்திர லேன்,
யாழ்ப்பாணம். (72004)
தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவரும் ஆகிய சுப்பிரமணியம் மகேஸ்வரி மலேசியாவில் 11.03.2008 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் சீ.கந்தையா-தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகளும் முத்தையா - சேதுப்பிள்ளையின் மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குமாரசிங்கம் கனகம்மாவின் சகோதரியும் உருத்திராணி, இந்திராணி, ஜன்சராணி, மகாராணி, பத்மராணி, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் பூலோகசிங்கம் செல்லத்துரை, செல்வேந்திரராசா, சங்கரதாஸ், தவேந்திரன், சாமினி ஆகியோரின் மாமியும் விஜயலட்சுமியின் சிறிய தாயாரும் குலராஜ், ரேணுகா, கனகராஜ் (மலேசியா), நிஷந்தினி, நிறோஜினி, சாந்தி, பாலினி, கலைவாணி, வினுஷயா, சேந்தன், கிருஸாந்தி, கிரானி, சுபசிவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யன்மினி, சிவானி, றோகான், சிவா, சச்சின் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் மலேசியாவில் இன்று (14.03.2008) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி. (72014)
தகவல்:
பத்மினி
(மருமகள்).

## ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர்

(பிரபல சமூகத் தொண்டர், காரைநகர் அபிவிருத்திச் சபைச் செயலாளர்)



காரைநகர் புது வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர் நேற்று (13.03.2008) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

புதுவீதி,
காரைநகர். (சி/551837)
தகவல்:
திருமதி புவனேஸ்வரி விக்னேஸ்வரன்
(சகோதரி).

# ஆசிரியர் உதவியாளர் நியமனத்திற்கான சிபார்சுப் பட்டியலுக்கு குடாநாட்டிலிருந்து 52 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் சேவையாற்றும் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டவர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இறுதிப்பட்டியலில் சிபார்சு செய்யப்பட்டவர்களின் விவரங்களை மாவட்டத்தின் சகல வலயக் கல்வி அலுவலகங்கள், கோட்டக்கல்வி அலுவலகங்கள், மேலதிக மகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றில் பார்வையிடலாம்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து சிபார்சு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

**வலிகாமம் வலயம்**

**ஆரம்பக்கல்வி:** செ.பத்மநிதி (அளவெட்டி அருணாசலம் வித்தி.), செ.மரிஸ்ரெலா (சுதுமலை சின்மயா பாரதி வித்தி.), திருமதி ம.ரீகன் (மாரீசன்கூடல் றோ.க.த.க.பா.), இ. தாட்சாயினி (கட்டுடை சைவ வித்தி.), திருமதி வா.தவச்செல்வம் (கீரிமலை நகுலேஸ்வரா வித்தி.), அ.லதாயினி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), கு.பிரியா (புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பா.), சி.யோகசாந்தினி (சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தி.), ஜோ.க.மரியகொறற்றி (ஆணைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.).

**சுகாதாரமும் உடற்கல்வியும்:** திருமதி க.பரமேஸ்வரன் (இளவாலை மெய்கண்டான் ம.வி.), ஜெ.நிரஞ்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆ.பா.), ரு.சுதர்சன் (வட்டு. இந்துக் கல்லூரி)

**தீவகவலயம்**

**ஆரம்பக்கல்வி:** சி.யாழினி (சரவணை நாகேஸ்வரி ம.வி), திருமதி உ.யோககுமார் (புங்குடுதீவு சித்தி விநாயகர் வித்தி.), க. துர்க்காபரா (நயினாதீவு கணேசா கனிஸ்ட வித்தி.), ஜோ.றஜிதா (புனித மரியாளர் றோ. க.ம.வி.), த.டலிதா (நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தி.), அ.பிறேமலா (நாராந்தனை றோ.க.ம.வி.), திருமதி பி.மகாலிங்கம் (சரவணை சின்னமடு றோ.க.த.ம.வி.),

**தென்மராட்சி வலயம்**

**ஆரம்பக்கல்வி:** ச.குமாரதாஸ் (நுணாவில் மேற்கு அ.த.க.பா.), திருமதி லோ.ஜெயந்திநாதன் (கைதடி சேதுகாவலர் வித்தி.), இ.மரியசுவர்ணா (நாவற்குழி ம.வி.)

**வடமராட்சி வலயம்**

**ஆரம்பக்கல்வி:** அ.ஜெயரதி (உடுப்பிட்டி அ.மி.க.), திருமதி அ.ஜெகநாதன் (கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பா.), மு.அனுஷா (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.), சி.நவநீதராணி (கற்கோவளம் மெ.மி.த.க.பா.), ந.நிரஞ்சன் (கரணவாய் பொன்னம்பலம் வித்தி.)

**ஆங்கிலம்:** இ.வினோதினி (கரணவாய் தாமோதரா வித்தி.), திருமதி ந.அரவிந்தன் (தும்பளை சிவப்பிரகாச ம.வி.), அ.பிறேமினி (மாதனை மெ.மி.த.க.பா.), வ.தர்சினி (துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பா.)

**சித்திரம்:** ப.சசிவண்ணன் (வல்வை மகளிர் ம.வி.)

**யாழ்ப்பாண வலயம்**

**ஆரம்பக்கல்வி:** ந.கேமரஜி (புத்தூர் பஞ்சக்க வித்தி.), செ.சுகன்ஜா (ஆவரங்கால் மகாஜன வித்தி.), திருமதி செ.புவனேந்திரராசா (ஊரெழு கணேசா வித்தி.), திருமதி தே.துரைரத்தினம் (வதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தி.), வி.சுபாஜினி (நவகிரி அ.மி.த.கபா.), க.ஜெயகாந்தா (புத்தூர் மெ.மி.த.க.பா.), ந.சிவகாம சுந்தரி (இந்து ஆரம்பப்பாடசாலை), ம.யாழினி (இந்து ஆரம்ப பாடசாலை), திருமதி ம.நடனசபை (புத்தூர் சோமஸ்கந்தா சபை), கை.ஆன்றுக்சி (சென். றோக்ஸ் வித்தி.), திருமதி றெ.ருமினா (பாசையூர் புனித அந்தோனியார் றோ.க.பா.), திருமதி மெ.ஜெசிதா (சென். ஜேம்ஸ் ம.வி.), திருமதி மா.றொ.றேணுகா (சென். ஜேம்ஸ் ம.வி.), திருமதி கி.உஷாந்தி (புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி)

**கிறீஸ்தவம் றோ.க.:** ஆ.ஜெயசீலி (செங்குந்தா இந்துக் கல்லூரி)

**பரதநாட்டியம்:** திருமதி த.ரவீந்திரன் (சென். ஜேம்ஸ் ம.ம.வி.)

**ஆங்கிலம்:** திருமதி க.ஜெகதீஸ்வரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**சித்திரம்:** திருமதி அ.கருணாகரன் (கொட்டடி நமசிவாயம் வித்தி.) (202-111-86)

## முன்னாள் பணிப்பாளர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்.போதனா வைத்தியசாலையில் நீண்ட காலம் பணிப்பாளராகப் பணியாற்றியவரும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியுமான வைத்தியகலாநிதி நவமலர் கனகரத்தினம் சுகயீனமுற்று, ஆஸ்பத்திரி நான்காம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இடர் காலத்தில் சிறந்த பணியாற்றிய இவர் நோய்வாய்ப்பட்டிருப்பதாக பலர் அறியாதிருப்பதால், அவரது அபிமானிகளுக்கு அதனைத் தெரியப் படுத்த வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(அ)

## ஸ்ரீல.சு.கட்சி மக்கள் பிரிவில் பிக்குகள் முன்னணி அமைப்பு

கொழும்பு, மார்ச். 14

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவினால் கடந்த புதன்கிழமை பிக்குகள் முன்னணி ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

வண. மாலவே சீலரத்ன தேரர் இந்த முன்னணிக்குதலைவராகவும், வண. கொலன்ன சிறிசாந்த விஜய தேரர் செயலாளராகவும்; வண. வத்தளை அமரவன்ச தேரர் பொருளாளராகவும் செயற்படவுள்ளனர்.

இந்த முன்னணியின் அங்குரார்ப்பணம்குறித்துதலைவர் மாலபே சீலரத்ன தேரர் கூறியவை வருமாறு:-

மஹிந்த அரசு மக்களுக்குத் தாங்க முடியாத சுமைகளை தொடராக சுமத்தி வருகிறது. யுத்தம் காரணமாகப் பணவீக்கம் வெகுவாக அதிகரித்துள்ளது. நூற்றுக்கு மேற்பட்ட அமைச்சர்களை வைத்துக்கொண்டு ஜனாதிபதி தேவையற்ற செலவுகளை ஏற்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் இந்த ஆட்சியை மாற்றியமைக்க வேண்டிய தேவையும் - அவசியமும் ஏற்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் பிக்கு முன்னணி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இதேவேளை, இந்த முன்னணியுடன் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேரர் களும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

(உ)


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் தலைவராய் விளங்கி
சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய
எமது சங்கத் தலைவர்

அமரர் திரு. ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைவதுடன் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக ஈழத்துச் சிதம்பரேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம்

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
ப.நோ.கூ.சங்கம், காரைநகர்.

(C/551835)



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
### வெளிவாரிப் பரீட்சைகள் - 2007

1.கலை முதற் தேர்வு - 2006
2.பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி I - 2005 & 2006
3.பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி -II 2004 & 2005
4.சிறப்புக் கலைமாணி பகுதி - III - 2004

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இப்பரீட்சைகளுக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 11.04.2008 (முடிவுத் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.100/= க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா.40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப் பதிவாளர். வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: மீள்பரீட்சார்த்திகள் (கலைமுதற் தேர்வு, கலைமாணி பகுதி - I மற்றும் கலைமாணி பகுதி - II) உரிய பரீட்சைப்பெறுபேறுகள் வெளிவந்த பின்னர் விண்ணப்பிக்கலாம்.

**பரீட்சைக் கட்டண விவரம்**

முதல் முறை பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான கட்டணம் ரூபா.1600/=. மீள் பரீட்சார்த்திகளாயின் ஒவ்வொரு பாட அலகிற்கும் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா.200/=

பதிவாளர்

(C/551830)


## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்.கே.கே.எஸ் வீதி, கோணாந் தோட்ட பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து நேற்று அழுகிய நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.கச்சேரி-நல்லூர் வீதியைச் சேர்ந்த துரைரட்ணம் சோதிராசா(வயது-55) என்பவருடைய சடலமே அது என்று இனங் காணப்பட்டுள்ளது.

இவர் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் காணமல் போயிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. இப்பகுதியில் துர்நாற்றம் வீசியதையடுத்து சடலம் கிணற்றுக்குள் இருப் பது இனங்காணப்பட்டது.

சடலம் மீட்கப்பட்டு கிராமசேவையாளரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (203-78)

## பெண்களின் வாய்த்தர்க்கம் கத்தி வெட்டில் முடிந்தது!

யாழ்ப்பாணம்,மார்ச்14

புத்தூர் வாதரவத்தையில் நேற்று விறகு வெட்டச் சென்ற பெண்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்தி வெட்டில் முடிந்தது.


அதே இடத்தைச் சேர்ந்த கிட்டிணபிள்ளை தங்கவேல் (வயது66), அவரது திருமணமான மகள் ரஜீவன் ஜெசினா (வயது 23) ஆகியோரே கத்திவெட்டுக்கு இலக்காகி யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த பெண்ணும் வேறு பெண்களுமே வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-78)

## இறைவனின் பல வடிவங்கள்

பரம்பொருளாகிய இறைவனுக்கு உண்மையிலேயே பலவடிவங்கள் இருக்கின்றன. அனந்த கல்யாண குணங்கள் எனப்படும் ஏராளமான தெய்வீகக் குணங்களும் இருக்கின்றன. ஆனால் வடிவமும் குணங்களும் இல்லாத நிலையும் அவருக்கு உண்டு. மனித மொழியில் விளக்கிச் சொல்ல இயலாத மிகப்பெரிய நிலை அது.

இறைவனை ஒரேவடிவத்தில் கண்ட பக்தன் இறைவனுக்கு ஒருவடிவம் மட்டுமே உண்டு என நினைக்கின்றான். கடவுளைப் பலவித வடிவங்களில் தரிசிக்கக்கூடிய பக்தர்களும் இருக்கிறார்கள். அவர்கள் மட்டுமே இந்த எல்லாவித உருவங்களும் ஒரே பாகவானுக்குரியவை. மேலும் அளவிட்டுச் சொல்லமுடியாத வடிவங்களும் குணங்களும் அவருக்கு உண்டு என்று உணர்ந்து சொல்லக் கூடியவர்களாக இருப்பார்கள். பச்சோந்தி என்னும் பிராணி தனது நிறத்தைச் சூழலிற்கேற்ப மாற்றிக்கொள்ளும் தன்மைவாய்ந்தது. சில சமயங்களில் ஊதாவாகவும், பச்சையாக வும், சாம்பல் நிறத்திலும்- இப்படிப் பல சமயங்களில் விதம் விதமான நிறங்களிலும் தோன்றுகின்றது. இதைப் போலவே பரம்பொருளாகிய இறைவனுக்கும் பல வடிவங்கள் இருக்கின்றன. கடவுளை சதாகாலமும் உண்மையாகவே ஒருவன் நினைக்க வேண்டும். அப்படிப்பட்ட தெய்வீக வாழ்க்கையிலே தோய்ந்திருப்பவனால்தான் இறைவனின் வடிவங்கள், குணங்கள் போன்ற நுட்பமானவையும் புலன்க ளுக்கு எட்டாதவையுமான அரிய உண்மை களைப் புரிந்து கொள்ள முடியும். அவனுக்குப் பகவானே அவற்றை எல்லாம் விளக்கிவி டுகிறார். அப்படிப்பட்ட உயர்ந்த பக்தனுக்கு கடவுளைப்பற்றிய எந்தவிதக் குழப்பமும் இருக்காது. இறைவனின் அருட் பிரவாகத்தை உணரமுடியும்.




## சோதனைகள் வேதனையா? சோதனையைத் தாங்குவோர் பேறுபெற்றோர்

நாம் எமது வாழ்வில் பலவிதமான சோதனைகளை சந்திக்கின்றோம். சோதனைகளை மேற்கொண்டு வெற்றி பெறுவது வாழ்வின் அனுபவமாக்கப்பட வேண்டியதொன்றாகும். எம் கிறிஸ்தவ வாழ்வில் சோதனைகள் இருவடிவம் பெறுகின்றன.

- இறைவன் எம்மை புடமிடும்படியாகச் சோதிக்கின்றான்.
- அலகையும் இறைவனிடம் இருந்து எம்மைப் பிரிப்பதற்காகச் சோதிக்கின்றான்.

நம் ஆண்டவர் இயேசுவும் சோதிக்கப்பட்டார். "இயேசு அலகையினால் சோதிக்கப்படுவதற்காகப் பாலை நிலத்திற்கு தூய ஆவியால் அழைத்துச் செல்லப்பட்டார்" (மத் 4:1 ) அலகையின் சோதனைக்கு இறைவன் இங்கு அனுமதிஅளிக்கின்றார். இதை யேசுவின் வாழ்விலும் நாம் காணலாம். (யோபு 1:12) இறைவன் சோதிப்பவர் அல்ல. சோதனைக்கு எம்மை அனுமதியளிக்கின்றார். எமது உயர்வுக்காகவும் எம்மைத் தகுதிப்படுத்தும்படியாகவும், புதுப் பலன் அடையும்படியாகவும் நாம் சோதிக்கப் படுகின்றோம். இவற்றின் மூலம் இறைநாமம் மகிமைப்படவேண்டும்.




"உங்களுக்கு ஏற்படுகின்ற சோதனை பொதுவாக மனிதருக்கு ஏற்படும் சோதனையே அன்றி வேறு அல்ல. கடவுள நம்பிக்கைக் குரியவர். அவர் உங்களுடைய வலிமைக்கு மேல் நீங்கள் சோதனைக்குள்ளாக விடமாட்டார். சோதனை வரும்போது அதை தாங்கிக்கொள்ளும் வலிமையை உங்களுக்கு அருளுவார்". (1கொரி 10:13)

சோதனை அனுமதிக்கின்ற இறைவன் அதைத் தாங்கிக் கொள்ளும் வலிமையை தருவதுடன் அதிலிருந்து விடுபடவும் வழிகாட்டுவார். எனவே சோர்வுக்கு இடம் கொடுக்காது செபத்தில் நிலைத்திருக்கும் சோதனைகளில் மேன்மை பாராட்டுவோம். "துன்பங்கள் தாங்கிக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றோம். ஏனெனில் துன்பத்தால் மன உறுதியும் மன உறுதியால் தகைமையும் தகைமையால் எதிர் நோக்கும் விளைவும் என நாம் அறிந்திருக்கின்றோம்". (உரோமர் 5:3-4) துன்பம் ஒரு சோதனை, அனேக துன்பங்கள் எம்மைப் பரலோக வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றன. துன்பங்கள் பரிசுத்த ஆவியின் கனிகளை எமக்குத் தரும். எனவே துன்ப நேரங்களில் இறைவனை விட்டு பிரியாது அவருக்கு நெருக்கமாகச் சென்று அவரின் துணையோடு அவற்றை வெல்லுவோம்.

நம் ஆண்டவர் இயேசு எல்லாவிதமான சோதனைக்குள்ளாவும் கடந்து வந்தவராகவே இருக்கின்றார். அவர் வெற்றி பெற்றார். இன்றும் எம் வாழ்வில் அனேக சோதனைகள் வரலாம். ஆனால் இயேசு சந்தித்த அந்த மூன்று சோதனைகளுக்குள் தான் மனித வாழ்க்கையில் வருகின்ற எல்லா சோதனைகளும் அடங்குகின்றது. நாம் கடவுளாக வாழவும், அவரது பணியைச் செய்யவும் தீர்மானம் எடுப்போமானால் அங்கே நிச்சயமாக சோதனைகள் வரத்தான் செய்யும். அவற்றை நாம் வெற்றி கொள்ளும் போதுதான் எமது வாழ்வு வெற்றியுள்ளதாக அமையும். எமது பணி மகிமையுள்ளதாக அமையும்.

Sr.டிலோசியா

## மோசடித் தேர்தலை...

### முதலாம் பக்கத் தொடர்ச்சி

ரும் அறிவார்கள். அந்த மக்களிடம் இந்தத் தேர்தல் திணிக்கப்பட்டிருந்தது.

நடைபெற்று முடிந்த இத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி முதலான கட்சிகள் போட்டியிடவில்லை. அதற்கான காரணங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் ஆணையகத்திற்கும், மக்களுக்கும் தெரிவித்திருந்தது. அந்த அம்சங்கள் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளன.

இராணுவம் மற்றும் ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தல்களுக்கும், கடத்தல், கொலை களுக்கும் மத்தியில் அரசின் சர்வ அதிகாரங்களும் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் பாவிக்கப்பட்டு இத்தேர்தல் அரங்கேற்றப்பட்டுள்ளது. இத்தனை பலப் பிரயோகத்திற்குள்ளும் கணிசமான வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

**கற்றை கற்றையாக வாக்குச் சீட்டுக்கள்**

வாக்காளர் அட்டைகள் திரட்டப்பட்டமை மற்றும் கற்றை கற்றையாகவே வாக்குச் சீட்டுக்கள் காணப்பட்டமை பற்றிய தகவல்கள் கசிந்து வருகின்றன. வாக்காளர் அச்சுறுத்தப்பட்டு வாக்குச் சாவடிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்ற செய்திகளும் வந்துள்ளன.

இச்செயற்பாடுகள் தொடர்ந்தும், எதிர்காலத்திலும் இந்த அரசு தேர்தல்களை இப்படித்தான் நடத்தப்போகின்றதென்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இந்த இலட்சணத்தில், ஒரு மோசடியான முறையில் மட்டக்களப்பு மாவட்டத் தேர்தலை நடத்திவிட்டு அது ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி என்றும், அரசின் கொள்கைகளுக்கு மக்கள் ஆதரவு வழங்கிவிட்டனர் என்றும் அரசு அறிவித்திருப்பது நாட்டு மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் திட்டமிட்ட செயல் என்றே நாம் கருதுகின்றோம்.

அரச ஆதரவு ஆயுதக்குழுக்களை எதிரும் புதிருமாகத் தேர்தல் களத்தில் இறக்கி, மோசடி நிறைந்த வாக்களிப்பொன்றின் ஊடாக ஓர் அரசியல் நாடகத்தை அரங்கேற்றுவதில் அரசு வெற்றிகண்டிருந்தாலும் உண்மையில் நடந்தது என்ன என்பதை எமது மட்டக்களப்பு மாவட்ட மக்கள் நன்கறிவார்கள்.

எமது இனத்தின் நீண்ட ஓர் இலட்சியப் பயணத்தில் இத்தகைய இடர்களையும் தடைகளையும் தாண்டி இறுதியில் எம் இனம் வெற்றியீட்டும் என்பதில் அசைக்க முடியாத உறுதியும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறோம். - என்று உள்ளது. (உ)

## கிழக்கைத் தனி ...

### முதலாம் பக்கத் தொடர்ச்சி

தக்குழுக்களின் ஆயுதங்களைக் களையப் போவதாக அங்கு சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதியளித்தது.

**சர்வதேச சமூகம் ஏமாற்றப்பட்டுள்ளது**

அந்த வாக்குறுதியை மறந்துவிட்டு பிள்ளையான் குழுவை அரசு பலப்படுத்தியுள்ளது. உத்தியோகபூர்வ அதிகாரத்தை அது அக்குழுவுக்கு வழங்கியுள்ளது. இதன் மூலம் சர்வதேச சமூகம் இந்த அரசினால் ஏமாற்றப்பட்டுள்ளது.

அக்குழுவுடன் அரசுத் தரப்பே தேர்தலிலும் போட்டியிட்டது. மோசடிகள் நிறைந்ததாகவே இத்தேர்தல் இருந்தது.

இத்தேர்தல் நேர்மையாக இடம்பெற்றது போன்று சர்வதேச சமூகத்திற்கு இந்த அரசு ஒரு தோற்றத்தைக் காட்டுகின்றது.

கிழக்கில் முழுமையான ஜனநாயகம் நிலைநாட்டப்படுவதற்கு முன் இத்தேர்தல் நடத்தப்பட்டிருக்கின்றது.

1993 இல் நாம் கிழக்கைப் புலிகளிடருந்து மீட்டெடுத்தபோது அங்கு ஒருவருட காலத்தில் முழுமையான ஜனநாய கத்தை நிலைநாட்டினோம். அதன் பின்பே 1994 இல் தேர்தலை நடத்தினோம்.

ஆனால், இந்த அரசு அப்படிச் செய்ய வில்லை. பிள்ளையான்குழு உட்பட பல ஆயுதக் குழுக்களைப் பலப்படுத்தியே இத்தேர்தலை அரசு நடத்தியது. தேர்தல் மோசடியில் ஈடுபட்டது.

பிள்ளையான் குழுவுக்கு உத்தியோகபூர்வ அதிகாரத்தை அரசு பெற்றுக் கொடுத்துள்ளது.

இத்தேர்தலில் இடம்பெற்ற வன்முறைகள் சரியாகக் கண்காணிக்கப்படவோ அல்லது பதிவுசெய்யப்படவோ இல்லை.

வரதராஜப்பெருமாள்போல் பிள்ளையானும் கிழக்கைத் தனிநாடாகப் பிரகடனப்படுத்தும் நிலைதான் இப்போது தோன்றியுள்ளது.

அரசால் பிள்ளையான் குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கும் உத்தியோகபூர்வ அதிகாரம் இதற்கும் நிச்சயம் துணைபோகும் - என்றார் அவர். (உ - 07)


# இதோ உங்களுக்காக...

FLASH



1) 1GB Kingston USB - 900/=
2) 2GB Kingston USB - 1400/=
3) 4GB Kingston USB - 2400/=

RAM KINGSTON
1) 512MB DDR II - 1600/=
2) 1GB DDR II - 2500/=
3) 256 DDR-I - 2400/=
4) 512MB DDR - 3750/=



TONERS
1) HP Toner 12 A - 5200/=(Original)
2) HP Toner 49 A - 5300/=(Original)
3) HP Toner 92 A - 5400/=(Original)
4) HP Toner 13 A - 5400/=(Original)
5) HP Toner 15 A - 5300/=(Original)

MOTHER BOARD
1) MSI - 5900
2) Biostar - 6400/=
3) Foxcon - 6700/=
4) Gigabyte - 7250/=
5) Intel 945 - 8600/=
6) Asus - P5GC-Max - 7500/=
7) 478 Mother Board - 7500/=

MONITORS
1) View.Sonic 15'' Silve Black - 12750/=(CRT)
2) View Sonic 17'' Black - 14500/=(CRT)
3) View Sonic 17'' Widescreen - 24750/=(LCD)
4) View Sonic 15'' Widescreen - 20750/=(LCD)



Intex Keyboard - 500/=
Intex Speaker - 500/=
DVD R/W Samsung - 4000/=

BOOFERS
1) Creatives 5.1 - 9500/=
2) Microlab 2.1 - 3700/=



HARD DISK
1) 80 GB SATA - 5250/=
2) 80 GB IDE - 5700/=
Casing White
VGA Card
T.V Card
478 Fan - 1150/=
Scanner - 6500/=
ATX Black Casing - 4500/=



PRINTER
1) HP 1020 Laser Jet - 18500/=
2) HP All inone - 14000/=
3) HP 1460 - 5500/=
4) Epson IQ 300+II - 21500/=
5) Samsung ML 2010 - 15250/= (Laser Jet)

Warranty உரிய பொருள்களுக்கு 1Year முதல் 3 Years வரை Warranty வழங்கப்படும்.

MUSIC WORLD & COMPUTERS

141B, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
(ஞாயிறு விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)



# தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ Mobile Phone Repairing
Hard Ware — Hard Ware Repairing
Soft Ware — Phone Lock — காலம்:- 1 மாதம்

★ Diploma in Hard Ware Engineering
காலம்:- 3 மாதங்கள்

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் றிப்பயறிங்
சகல இன றேடியோக்கள், ரெலிவிசன், வீடியோடெக், CD, Amp திருத்துதல் பயிற்சியளிக்கப்படும் — காலம்:- 9 மாதங்கள்

★ ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன்கள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். காலம்:- 6 மாதங்கள்

★ எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங், வீட்டு மின் வேலை, மோட்டார், Fan, Transformer வைண்டிங் செய்யப்படும் முறை பயிற்சியளிக்கப்படும்
காலம்:- 6 மாதங்கள்

ஆரம்பம்:- 14.03.2008 (வெள்ளி)
15.03.2008 (சனி)

JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 45, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0212226434, 0779254078


## காவலில் உள்ள 5...

### முதலாம் பக்கத் தொடர்ச்சி

விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

கொழும்பில் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரினால் ஒருவார காலத்திற்கு முன்னர் கைது செய்யப்பட்ட ஐந்து தமிழ்ப் பத்திரிகையாளர்களின் நிலைகுறித்து எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு ஆழ்ந்த கவலையடைந்துள்ளது. இவர்கள் ஏன் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கான காரணத்தை இலங்கை அரசு தெளிவுபடுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றது.

விடுதலைப் புலிகளிடமிருந்து பத்திரிகையாளர்கள் பணம் பெற்றனர் எனப் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. எனினும் இது குறித்த விசாரணைகளை நாம் மேற்கொண்ட பின்னர் குறிப்பிட்ட நிதி ஜேர்மன் மன்றமொன்றிடமிருந்தும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடமிருந்தும் அவர்களுக்குக் கிடைத்துள்ளமையை உறுதி செய்ய முடிந்தது என ஊடக சுதந்திர அமைப்புத் தெரிவிக்கின்றது.

பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இப்பத்திரிகையாளர்களில் சிலர் தடுப்புக் காவலில் வைத்து மோசமாகத் தாக்கப்பட்டமையை நாங்கள் கண்டிக்கிறோம். அவர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெறும் நோக்கத்துடனேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

'அவுட்ரீச்' எனும் இணையத்தளத்திற்காகவும் தமிழ் மாணவர்களுக்கு உதவுவதற்குமே வி. ஜசிகரன், ஜே.எஸ். திஸநாயகம் என்ற இரு பத்திரிகையாளர்களும் நிதியை வெளிநாட்டிலிருந்து பெற்றனர்.

இந்த முயற்சிக்காக ஜேர்மனியைச் சேர்ந்த எவ்.எல்.ஐ.சி.டி. எனும் அமைப்பு 'அவுட்ரீச்சின்' ஆசிரியர் திஸாநாயகத்துக்குப் பன்னிரண்டாயிரம் யூரோ (சுமார் 15 லட்சம் ரூபா) நவம்பர் மாதத்தில் வழங்கப்பட்டுள்ளமை பற்றிய தகவலை எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பிடம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண மாணவர்களுக்கு உதவுவதற்கு ஜேர்மனியிலுள்ள தமிழர்களிடமிருந்து வி.ஜசீகரன் நிதியுதவி பெற்றமையும் உறுதியாகியிருக்கின்றது.

'ஈ.குவாலிட்டி' அச்சக உரிமையாளரும் தமிழ்த் தேசியவாத நிலைப்பாடுகளுக்காக நன்கு அறியப்பட்ட பத்திரிகையாளருமான ஜசிகரன் 6 ஆம் திகதி கொழும்பில் கைதுசெய்யப்பட்டார்.

தொலைக்காட்சித் தயாரிப்பாளரான அவரது மனைவியும் கைதுசெய்யப்பட்டமையுடன் அவர்களின் கணினி மற்றும் அச்சு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் பத்தி எழுத்தாளரும் 'அவுட்ரீச்' இணையத்தள ஆசிரியருமான திஸநாயகமும் செய்தியாளர் கித்சிறி விஜயதுங்க, புகைப்படப்பிடிப்பாளர் கயன் லசந்த ரங்க, வீடியோ தயாரிப்பாளர் உதயனன் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (உ)

## தமிழீழத்தை...

### முதலாம் பக்கத் தொடர்ச்சி

யர் சங்க தலைவர் ஜெ.குரு மற்றும் பா.ம.க.நிர்வாகிகள், விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவன், சினிமா இயக்குனர்கள் தங்கர்பச்சான், சீமான், ஓவியர் புகழேந்தி, தணிகைச்செல்வன், பேராசிரியர் ஏ.ராஜேந்திரன், செய்தித்துறை முன்னாள் இணை இயக்குநர் ப.ஜெயப்பிரகாசம், மனிதம் சுப்பிரமணியம் மற்றும் ஈழத்தமிழர்களை ஆதரிக்கும் அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவர்கள் பேசும்போது, தமிழீழத்தை தமிழக அரசு அங்கீகரிக்க வேண்டும்; விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும்; இதற்காக மாநில அரசு தனி தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

மேலும், இதற்கான முயற்சியை பா.ம.கவும், விடுதலைச் சிறுத்தைகளும் சட்டமன்றத்தில் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

தமிழீழத்தில் சிங்கள இராணுவத்தினர் தமிழர்களைப் படுகொலை செய்கின்றனர் எனவும் அவர்களுக்கு ஆதரவாக இந்திய அரசு செயல்படுவது கண்டனத்திற்குரியது என்றும் அங்கு உரையாற்றியவர்கள் குறிப்பிட்டனர். இந்திய அரசு சிங்கள அரசுக்கு இராணுவ உதவியோ, பயிற்சியோ தரக்கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

**திருமாவளவன்**

இக்கூட்டத்தில் பேசிய விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் அங்கு கூறியவை வருமாறு:-

இந்திய அரசு சிங்கள இராணுவ அதிகாரிகளை வரவேற்று சிறப்பு செய்ததுடன் இலங்கையில் நடைபெறும் போரில் சிங்கள அரசு வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்தியதை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கண்டித்துள்ளனர்.

இதுவரை இந்தியாவுக்கு எதிராக வெளிப்படையான கருத்தைத் தெரிவிக்காத அவர்கள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து இன்றைய நிலையில் இந்திய அரசின் நிலைப்பாட்டை அம்பலப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்தக் கண்டனக் கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், தமிழ்நாடும் தமிழர்களும் தமக்கு உரிய கடமையை செய்யவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். தமிழீழத்தில் உள்ள தமிழர்கள் பற்றி நாம் கவலைப்படாவிட்டாலும் இங்குள்ள தமிழக மீனவர்கள் பற்றியாவது கவலைப்பட்டாக வேண்டும்.

இதற்காக சிங்கள இராணுவத்திற்கு இந்தியா எந்த வகையிலும் உதவக் கூடாது; தமிழக மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி முதல் கட்டமாகத் தொடர் முழக்க போராட்டம் ஒன்றை நடத்துவோம்.

இந்தப் பிரச்சினையில் பா.ம.கவும், விடுதலைச் சிறுத்தைகளும் இணைந்து செயல்படுவார்கள். டாக்டர் ராமதாஸ் எடுக்கும் முடிவுக்கு இணங்கத் தொடர்ந்து செயலாற்றுவோம் - என்றார். (அ)

## கப்பல் பயணிகள்...

### முதலாம் பக்கத் தொடர்ச்சி

மேற்படி பஸ் கட்டணம் தொடர்பில் ஆராயும் கூட்டமொன்று நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் இ.போ.ச. பிரதேச முகாமையாளர் க.கணேசபிள்ளை, செயலாற்றுப் பிராந்திய முகாமையாளர் எஸ். கமலநாதன் மற்றும் சிவில் நிர்வாக அலுவலகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தின் முடிவில் கட்டணக் குறைப்புத் தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது. இதன்படி யாழ். சிங்கள மகாவித்தியாலகத்தில் இருந்து தெல்லிப்பளைக்குச் செல்லும் கப்பல் பயணி ஒருவரிடமிருந்து 75 ரூபா அறவிடப்படும். மேற்படி கட்டணக் குறைப்பு இன்று உடனடியாக நடைமுறைக்கு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பளைக்குச் செல்லும் கப்பல் பயணிகளிடமிருந்து பயணக் கட்டணமாக இதுவரை ரூபா 100 அறவிடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2-203)

## குடாநாட்டில் மழை...

### முதலாம் பக்கத் தொடர்ச்சி

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் மழை தொடர்ந்து பெய்யும் சாத்தியம் உண்டு என்று வளிமண்டலவியல் திணைக்களத்தினைச் சேர்ந்த திருமதி ஜெயக்கொடி அறிவித்துள்ளார்.

இதேவேளை- தற்போது பெய்துவரும் மழை காரணமாக கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மூதூர் பிரதேசத்தில் தொடர்ந்தும் மழை பெய்வதால் அங்குள்ள பாதைகளும், வயல்களும் வெள்ளத்தில் மூழ்கிவிடும் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

இதேவேளை, வங்காள விரிகுடாவில் உருவான தாழ் அமுக்கத்தினால் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் அடைமழை பெய்தது. அதனால் பெரும் பயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவும் மழை தொடர்ந்து பெய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-2-50)

## சர்வதேச சிவில்...

### முதலாம் பக்கத் தொடர்ச்சி

இந்த விடயம் குறித்து ஆராய்ந்து முடிவைத் தமக்கு அறிவிக்குமாறு உயர்நீதிமன்றத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியிருக்கின்றமையை அடுத்தே உயர்நீதிமன்றம் இவ்விடயத்தைத் திங்களன்று பரிசீலிக்க விருக்கின்றது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, சலீம் மர்சூக், அன்ட்ரூ சோமவன்ஸ, ஜகத் பாலபட்டபெந்தி ஆகியோர் முன்னிலையிலேயே இந்த விவகாரம் திங்களன்று எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றது. (உ - 06)

## அடாத மழை...

### முதலாம் பக்கத் தொடர்ச்சி

இதேவேளை, மன்னார் நகரப் பகுதி முழுவதும் நேற்றுக்காலை 7 மணிமுதல் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

நேற்று அதிகாலை மாந்தை மேற்கில் சில இடங்களில் புலிகள் ஊடுருவி படை நிலைகள் மீது மோட்டார் தாக்குதல்களை நடத்தியமையை அடுத்தே அப்பிரதேசத்தில் கடுஞ்சமர் வெடித்ததாக ஒரு தகவல் தெரிவித்தது.

இராணுவத்துக்கு உதவியாக விமானப்படை ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ - 03)


# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் காசிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர் -காணிப்பதிவகம், யாழ்ப்பாணம்- இ.மி.ச.,சுன்னாகம்)

யாழ். ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் காசிப்பிள்ளை (13.03.2008) இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் ஆனந்தமனோகரியின் அன்புக்கணவரும் சகுந்தலாதேவி, நிர்மலாதேவி, ஜெகதீஸன்(பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ்.மா.ச.),சத்தியதீஸன்(பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.ப.க), சுலோசனா (ஆசிரியை, யா/உயரப்புலம் மெ.த.க.வித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழ். வண்ணார்பண்ணை, ஐயனார் கோயிலடி வீதி, உடையார் லேனிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று பிற்பகல் 3மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடையார் லேன்,*
*ஐயனார் கோவில் வீதி,*
*வண்ணர்பண்ணை.*
*021-222 8824*

தகவல்:
மனைவி



# முக்கிய அறிவித்தல்

நாளை (15.03.2008) சனிக்கிழமை சகல வகுப்புக்களும் வழமைபோல் நடைபெறும்.

நிர்வாகி.

NEW SCIENCE HALL, JAFFNA.

(C/551836)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.